ஓடினார். தேடினார். வாடினார். வருந்தினார். நாட்டிலுங் காட்டிலும் அலைந்தார். உலைந்தார். அவர் பட்டபாடு பஞ்சு கூடப் படாது. அத்துணை வருத்தமுற்றார். அருள் தாகத்தினால் உள்ளந் துடித்தார்.

தேட்டிலே மிகுந்த சென்னையில்
இருந்தால்

சிறுகுளம் என்றுளம் பயந்தே

நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்
களிலே

நண்ணினேன்; ஊர்ப்புறம்
அடுத்த

காட்டிலே பருக்கைக் கல்லிலே
புன்செய்க்

களத்திலே திரிந்துற்ற
இளைப்பை

ஏட்டிலே எழுத முடியுமோ?
இவைகள்

எந்தை நீ அறிந்தது தானே.

சுவாமிகள் 'தான் பட்ட' பாட்டையும், அடைந்த அல்லலையுங் கூறுகின்றார். ஆ! நினைந்தால் கல்லுங் கரையும்! இரும்பு உருகும்!

நான்படும் பாடுசிவனே உலகர்
நவிலும் பஞ்சு

தான்படு மோ? சொல்?
தான்படு மேலத்எண்த்ண
தான்மடுபோ?

கான்படு கண்ணியின் மான்
படு மாறு கலங்கி நின்றேன்

ஏன்படு கின்றனை யென்றிரங்
காயென்னில் என்செய்வனே

## உறங்காது இரங்கல்

இவ்வாறு திருவருளை நாடி அடிகளார் வாடினார். வருந்தினார். அப்பன் அருள் எங்கே? எப்பொழுது கிடைக்கும்? அந்தோ! நாள் ஒவ்வொன்றாய்க் கழிகின்றதே? என்செய்வேன்? என்று ஏங்கினார். இரங்கினார். அழுதார், தொழுதார். அலறினார், உலறினார்.

இப்படி ஒரு நாளன்று; இரு நாளன்று; பலநாள் பரிதவித்தார். ஒருநாள் இரவு நடுயாமம். எங்கும் நிசப்தம்; அமைதி. பித்தரும் பத்தரும் முத்தரும் உறங்குகின்றார்கள். சாந்தி நிலவுகின்ற நேரம்.

நித்தநிய மத்தொழில ராய்
நிறையு ஞானத்

துத்தமர் உறங்கினர்கள்;
யோகியர் துயின்றார்

மத்தமத வெங்களி றுறங்கின
மயங்கும்

பித்தரும் உறங்கினர்; இனிப்
பிறரி தென்னும்.

என்று கம்பநாடர் கூறியவாறு, சராசரங்கள் யாவும் அமைதியாக உறங்குகின்றன.

அந்த நள்ளிரவில் மேட்டுக் குப்பத்தில் சித்தி விளாகம் என்ற குடிசையுள் இராமலிங்க அடிகளார் மட்டுமே உறங்காது இரங்கினார்.

## அம்பலத்தாடும் அருளரசே!

''அம்பலத்தில் ஆடுகின்ற அருளரசே! எங்கும் நிறைந்த எம் பெருமானே! சிறியேன் படுகின்ற வேதனையைத் தேவரீர் அறிந்திலீரோ? எல்லாம் அறிந்த இறை

வனே! கொசு பறக்கின்ற ஓசையும் உன் காதில் விழுமே! அடியேனுக்கு அம்மையும், அப்பனும் நீதானே? மகனுகிய சிறியேனை இப்படித் தவிக்க விடலாமோ? இது நின் கருணைக்கு அழகா? அப்பனே! அருட் கடலே! ஆனந்தக் கூத்தனே! கருணுநிதியே! கலைக் கடல் கடத்தும் அருள் தோணியே! மனத் தளர்ச் சிக்கு ஆணியே! முக்தியுலகிற்கு ஏணியே! இனி என்னல் இத்துன்பம் பட முடியாது பரம கருணைத் தெய்வமே!'' என்று துதி செய்தார்.

## மூர்ச்சித்தார்!

இவ்வண்ணம் செவ்வண்ணப் பெருமானை நினைந்து நினைந்து உருகினுர். ஊற்றெழுங் கண்ணீரினுல் நனைந்து நனைந்து நொந்தார். உள்ளங் கனிந்து, அழுது தொழுது அங்ஙனமே மண்மேல் வீழ்ந்து மூர்ச்சித்து விட்டார்!

## கண்ணுதலைக் கண்டார்!

அம்பலத்திலே அநவரதமும் ஆனந்தத் தாண்டவம் புரியும் ஆண்டவர் அருள் வடிவங் கொண்டு வந்தருளினுர். உள்ளம் உணர்வு உரை முதலிய எல்லாம் ஒடுங்கி அவசம் உற்றிருக்கின்ற வள்ளலாரை எம் பெருமான் தனது தாமரைத் தடக்கரங்களால் எடுத்தார். முகத்தைத் துடைத்தார்.

வள்ளலார் கண் விழித்துப் பார்த்தார். ஒளி மயமான ஈசனைக் கண்டார். ஆனந்தங் கொண்டார். ஆ! ஆ! ஆண்டவனே! எளியேனையும் ஒரு பொருளாக எண்ணி இப்பாதி ராத்திரியில் எருந்தருளி வந்தீரே! பரங் கருணைத் தடங்கடலே! அப்பனே! ஒப்பிலா மணியே! அருள்பெருது அல்லல்பட்டுத் தவிக்கிறேன், தயாநிதியே! ஐயனே! உய்யுமாறு அருள்'' என்று தொழுதார்.

## அருட்பெருஞ்ஜோதி

உடனே மின்னல்போல் ஓர் ஒளியை இறைவர் உண்டாக்கினுர். அந்த ஒளியே தானேயானுர். அவ்வொளியான அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலார் கண்வழி நுழைந்தார். அவருடைய உடம்பில் புகுந்தார். ஊன், உள்ளம், உணர்வு, உயிர் இவைகளில் கலந்து விட்டார். அந்த அருள் மின்சாரம் பாய்ந்ததும் வள்ளலாருக்கு உண்டாகிய இன்பத்துக்கு எல்லையே இல்லை! ஊன் குளிர்ந்தது; உள்ளம் குளிர்ந்தது. உரை குளிர்ந்தது. நாடி நரம்புகள் குளிர்ந்தன, கண்கள் குளிர்ந்தன. உயிர் குளிர்ந்தது. ஆ! ஆ! சொல்ல முடியாத ஆனந்தம். பரிபூரண இன்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாகி மேலிட்டு வழிந்தது!

## உலகம் பெறுதல் வேண்டும்

பின்னர் அடிகளார் முன்னையிலும் பன்மடங்கு மீறிய துன்பமுற்று அழுதார். ''ஐயனே!'' ஐயனே!'' என்று அலறினுர். எம்பெருமான் இப்போது அவருடைய உள்ளுக்குள் நின்று, ''மகனே இப்போது நீயும் நானும் ஒன்றுபட்டுக் கலந்து நிற்கின்றேமே! அருளார் அமுதை அள்ளி வழங்கினேனே! இந்தப் பேரின்ப நிலையை வழங்கியபின் ஏன் அழுகின்றுய்?'' என்று வினுவியருளினுர்.

அடிகளார், ''ஆண்டவனே! அருளாரமுதம் எளியேனுக்குக் கிடைக்கவில்லையே யென்று முன்னே துன்பமுற்றேன். உமது பேரருளைப் பெற்றபின், முன்னிலும் பன்மடங்கு துன்புறுகின்றேன். இத்தகைய இன்பம் மற்ற உயிர்களுக்குக் கிடைக்கவில்லையே? ஆன்மாக்கள் தவமே செய்யாது அவமே திரிந்து அலைந்து கெடுகின்றனவே! அந்தோ! இந்த இன்பம் என்போல் எல்லாரும் பெற வேண்டாமோ! எந்தையே! முந்தி என் பொருட்டு அழுதேன்! இப்போது உலக உயிர்கள் எல்லாருக்காகவும் அழுகின்றேன்!'' என்றார். அவருடைய கருணை தான் என்னே! அப்போது அவர் அருளிச் செய்த அமுதப் பாடல் இதோ!

பாதி யிரவில் எழுந்தருளிப்
பாவியேனை யெழுப்பி அருட்

ஜோதியளித் தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்துதுலங்குகின்றாய்

நீதிநடஞ்செய் பேரின்ப நிதி
நான் பெற்ற நெடும் பேற்றை

ஓதி முடியாதென்போல் இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே.

மந்திரங்களினால்
இகத்திற்கு வேண்டிய
சில சாதனைகளைத்
தேவதைகளின்
உபாயத்தால்
செய்து கொள்ளலாம்.

# மந்திர மாவது யாது?

மந்திரம் என்பது ஒரு தந்திரம் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் மணி, மந்திர ஔஷதம் என்பன வேதங்களிலேயே சொல்லப்பட்டிருக்கின்றனவே! அப்படியிருக்க மந்திரம் ஒரு தந்திரம் என்று எப்படிச் சொல்ல முடியும்? மந்திரம் என்பது என்ன? அதை உருப் போடுவதால் எவ்வித பயன் உண்டாகிறது? அதற்கு விஞ்ஞான ரீதியில் ஏதாவது ஆதாரமுண்டா? என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

மணி என்பது விந்து என்னும் ரசத்தை நெருப்பிற்கு ஜெயிக்கும்படி கட்டி அதற்குச் சாரணைகள் ஏற்று அந்த ரசமணியை வாயில் அடக்கிக்கொண்டு நினைத்த மாத்திரத்தில் ஓர் இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் மற்றொரு குறிப்பிட்ட இடத்திற்குச் சேரக்கூடிய சக்தியைக் கொடுக்கக் கூடியது. இது 'கமனமணி.' இம்மாதிரியான மணிகளைச் சித்தர்கள் செய்து புழங்கி வந்தார்கள் என்பதை நாம் நூல்வாயிலாக அறிகிறோம். அந்தக் கட்டிய ரசத்திற்கு வர்ணம் கொடுத்துத் தங்கமாக்கும் வித்தையை 'ரசவாத வித்தை' என்று சித்தர்கள் சொல்வதையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம்.



ஆர். மீராதேவி

அதைப்போலவே, மந்திரம் என்பது சில குறிப்பிட்ட எழுத்துக்களைச் சேர்த்து அதற்குப் பஞ்சாட்சிரம், அஷ்டாட்சிரம், தாரக மந்திரம் என்றெல்லாம்

பெயரிட்டு அழைக்கலாயினர். அநேகமாகப் பல மந்திரங்களுக்கு ஒரு பொருளும் இருக்காது. உதாரணமாக அங், கிங், கிரியம், கூம், கூம், என்றெல்லாம் மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரங்களை ஒருகுறிப்பிட்ட எண்ணிக்கை அளவு உருபோட்டால் அதற்கு உகந்த ஓர் உருவம் உண்டாகி அவ்வுருவம் ஜெபிப்பவனுடைய கண்ணுக்குத் தோற்றமளிக்கும் என்றும், அந்த உருவத்திற்குச் சில காரியங்களைச் செய்யக் கூடிய வல்லமை உண்டென்றும் புலனுகிறது. அநேக மக்கள், குட்டிச் சாத்தான் வசியம், பன்றிமாடன் வசியம், ஆஞ்சி நேயர் வசியம் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனுல் இந்து உருவங்களைச் சிருஷ்டிக்கக் கூடிய எழுத்துக்களை எப்படி நம் முன்னேர்கள் பிணைத்தனர் என்று ஆலோசிக்கும் போது பெருத்த ஆச்சரியத்தை உண்டாக்குகிறதல்லவா? இந்த எழுத்துக்களையே பூர்வத்தில் பீஜாட்சிரம் என்று சொல்லலாயினர். ஆனுல் இந்த பீஜாட்சிரங்கள் எப்படி அந்த உருவத்தை உண்டாக்குகின்றன் என்பதை நம் பெரியோர்கள் சொல்லவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு விஞ்ஞான ரீதியில் அறிவில்லாமையினுல் அல்ல, அதனுடைய தத்துவத்தைச் சொல்லுமிடத்து அந்தத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளும் வல்லமை அக்காலத்திய மக்களுக்கு இல்லாமையே என்று தோன்றுகிறது.

இக்காலத்தில் விஞ்ஞான ரீதியாய் ஒவ்வொரு சப்தத்திற்கும் ஒவ்வொரு ரூபம் உண்டு என்பதைக் கண்கூடாகக் காட்டுகிருர்கள். ஒவ்வொரு நாமத்திற்கும் ரூபம் உண்டு என்று நம் பெரியவர்கள் கூறியுள்ளனர். பல வருடங்களுக்கு முன் இருந்த தியாகையர், 'நீ நாம ரூபமுலகு நித்திய ஜெய மங்களம்' என்று சொல்லியுள்ளனர். இக்காலத்தில் கிராமபோன், சினிமா முதலியவைகளில் நாமம் ரூபமாகி மறுபடியும் ரூபம் நாமமாக ஒலிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். சப்தங்களைச் சினிமா ரீலிலேயே ஓர் ஒளி மூலமாக அமைத்து ரீல் ஓடும்போது அந்த ஒளி ரூபம், நாமமாவதைப் பார்க்கிருேமல்லவா?

அதைப்போல, நம் பெரியோர்கள் வெகு பிராயாசையுடன் மேற்சொன்ன பீஜாட்சிரங்களின் மூலமாய் மந்திரங்களை அமைத்து ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு தேவதைகளின் நாமமிட்டு அவ்வவ்வகைகளினுடைய சக்திகளின் பிரபாவத்தையும் சொல்லியுள்ளனர். அந்தத் தேவதைகளை, க்ஷுத்திரதேவதை அதி தேவதை, எனவும் பிரித்துக் காட்டியுள்ளனர். க்ஷுத்திர தேவதை என்னும் அங்கத்தினுள் குட்டிச்சாத்தான், பன்றிமாடன் என்னும் தேவதைகளும், தேவதைகள் என்னும் அங்கத்தினுள் ஆஞ்சி நேயர், காளி முதலிய தேவதைகளும், அதி தேவதை என்னும் அங்கத்தினுள் ராமன் கிருஷ்ணன், முருகன், லக்ஷ்மி முதலிய தேவதைகளையும் குறிப்பிட்டுள்ளனர். இந்தத் தேவதைகளினுள் அவ்வவ்வகைகளுக்கு என்ன சக்திகள் உண்டோ அவைகளைப் பொறுத்து அம்மந்திரங்களை உபாசனை செய்யக் கூடியவர்களுக்கு நன்மை தீமைகள் வருகின்றன.

ஆனுல் இந்த மந்திரங்களினுல் பராபரத்தை அடைய முடியுமா?

என்பது ஒரு கேள்வி. பராபரத்திற்கும், தேவதை, அதிதேவதைக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் அறிதல் வேண்டும். பராபரம் 'என்பது சர்வசக்திகளுக்கும் கர்த்தாவாக உள்ளதாகும். மந்திரங்களாய்க் கட்டுப்படுத்தக் கூடிய பொருள் அல்ல பராபரம். ஆகவே அஞ்செழுத்து மூன்றெழுத்து என்பதெல்லாம் முக்திக்குச் சாதகமானவைகளல்ல. ஓரெழுத்தென்னும் பராபரத்தை ஊன்றிக் கவனித்தலே உபாயமென்றனர்.

''அஞ்செழுத்தும்மூன்றெழுத்தும்
என்றுரைக்கும் அன்பர்கள்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும்
அல்ல காணும் அப்பொருள்
அஞ்செழுத்து நெஞ்சழுத்தி
அவ்வெழுத்தறிந்தபின்
அஞ்செழுத்தும்அவ்வின்வண்ணம்
ஆனதே சிவாயமே.''

''ஆதரித்த மந்திரம்
அமைந்த ஆகமங்களும்
மாதர் மக்கள் சுற்றமும்
மயக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ
எங்கும் ஆகி நின்றதோ
சோதிபுக் கொளித்திடம்
சொல்லடா சுவாமியே''

மந்திர மென்பதும், மாதர் மக்கள் போன்ற ஓர் மயக்க வந்த நித்திரை, அதாவது ஓர் மாயை என்று குறிப்பிட்டனர்.

''அரியுமாகி அயனுமாகி
அண்டமெங்கும் ஒன்றதாய்
பெரியதாகி உலகுதன்னில்
நின்ற பாதம் ஒன்றலோ
விரிவதென்று வேறு செய்த
வேடமிட்ட மூடரே
அறிவிேைடு பாரும்
இங்கும் அங்கும் ஒன்றதே''


அப்படியிருக்க நாம் நம் மனத்தைப் பல துறைகளில் ஓடவிட்டு மந்திரங்களைச் செபித்து முக்திக்குச் சாதகமில்லாத தேவதைகளைக்கூட்டி வைத்துக் கொள்ளதில் பயன் என்ன?

இந்தப் பராபரத்தை மந்திரங்களினால் அடைய முடியாது என்றால் வேறு எந்த உபாயத்தினால் அடைய முடியும்? அன்பினால் தான் அடைய முடியும் என்று திருமூலர் முதலிய சித்தர்கள்கள் கூறியுள்ளனர். ஆனால் மந்திரங்களினால் இகத்திற்கு வேண்டிய சில சாதனங்களைத் தேவதைகளின் உபாயத்தால் செய்து கொள்ளலாம். வசிய தேவதைகளைக்கொண்டு சில காரியம் செய்து மக்களைப் பிரமிக்கச் செய்யலாம். ஆகவே சாலச் சிறந்த மார்க்கம் பராபரத்தை அடையும் மார்க்கமே.

பெரியவர்கள் அளவு
நாம் புகழ் பெற
முடியாது போனாலும்,
சிறக்க வாழ்ந்த
பெருமை பெறவாவது
நமக்கு
வாய்ப்பு இருக்கிறது.

# நமக்குத் தொழில் அன்பு செய்தல்

இராதா சம்பத்



கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைக் கெடுத்துக் கொள்வதே மனிதனுடைய நித்திய கடமையாகிவிட்டது. மானிடப் பிறவியின் மகத்துவம் குறித்து மகான்கள் பலர் பல நூல்கள் வாயில்களாகவும், உபதேசங்கள் வாயில்களாகவும் கூறியும் கூட, அம்மகான்களின் பெயர்களையும், உபதேசங்களையும் கூறிக் கொண்டே வாழ்க்கையில் அவற்றைக் கடைப் பிடிக்காது இரட்டை வாழ்க்கையை ஒரே பிறவியில் வாழ்ந்துவிட்டு மனிதன் மண்ணாகிறான். இதனால் இருந்தான், வாழ்ந்தான், போனான் என்ற முக்கால எல்லைக்குள் மனித வாழ்வு முடிந்து விடுகிறது.

'தோன்றில் புகழொடு தோன்றுக' என்றார் தமிழ்மறை தந்த திருவள்ளுவர். தோன்றுவதில் புகழோடு வாழவேண்டாமா? இருந்தான், போனான் என்ற பெயரை விட, நன்றாக வாழ்ந்தான், இருந்த வரையில் ஏற்றமோடு இருந்தான், எல்லாரிடமும் அன்போடு பழகினான், தியாகியாக வாழ்ந்தான் எனப் பல்லோர் பாராட்டோடு மறையலாம் அல்லவா?

அப்படிப்பட்ட புகழோடு வாழ்ந்த வாழ்வு சிறக்கப் பல கொள்கைகளையும், பல இலட்சியங்களையும் பெரியோர்கள் பலர் வகுத்து வைத்திருக்கின்றனர். அண்மையில் மறைந்த நம் மகாத்மா காந்தி அடிகள் அகிம்சையையே தம் குறிக்கோளாகக் கொண்டு மறையாத புகழுடம்பு பெற்றார். 'வடலூர் ஐயா' அவர்கள் ஜீவகாருண்யத்தையும், பிற பிறவிகளிடம் அன்போடு நடத்தலையுமே தமது இலட்சியமாகக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பெரியவர்கள் அளவு நாம் புகழ்பெற முடியாது போனு லும் சிறக்க வாழ்ந்த பெருமை பெறவாவது நமக்கு வாய்ப்பிருக் கிறது. ஏன்? அன்புடைமை யையே எடுத்துக் கொள்வோமே. பிற ஜீவன்களிடம் பிரியமும், உள்ளந் தெளிந்த பழகுந்தன்மை யும், சுவையானதும் நெகிழ்ச்சி யைத் தரக்கூடியதுமான வார்த் தைகளைக் கையாள்வதும் அன் புடைமையை ஓரளவு விளக்கிக் கூறும் பண்புகளாகலாம்.

அன்பு பிறக்குமிடம், காத லாகி, கசிந்துருகி, கண்ணீர் மல் கும் உள்ளத்தில்தான். இது பேரின்பச் சாலையை நாம்அடைய வழி காட்டும் ஒரு வழிகாட்டி. நெகிழ்ந்த உள்ளமல்லாது கட வுளை நாம் அடைய முடியாது. நெகிழ்ச்சியான உள்ளத்துக்கு அன்புடைமையே சரியான உரம். இந்த உரத்தை இட்டுத்தான் உள்ளத்தை நெகிழ்ச்சிப் பதத் திற்குக் கொண்டுவர முடியும்.

நாம் பேசும் வார்த்தைகளி லேயே அன்புடைமையை எளி தாக நாம் கொண்டு வரமுடியும். அன்புடைமையை வற்புறுத்தும் நூல்களில் மட்டுமின்றி இறை வனை ஏற்றித் துதிக்கும் பாடல் களில் எல்லாமே வார்த்தைகள் அன்பைப் பிரதிபலிக்கும் வகை யிலேயே அப்பா, அம்மையே, செல்வமே, மாமணியே, ஆர முதே—என்று இந்த முறையி லேயே அமைந்திருப்பதைக்காண லாம். வள்ளுவர் கூறுவதுபோல் இனிய வார்த்தைகள் நாம் பேச ஏராளமாக இருக்க, கடுமை வார்த்தைகளை உபயோகித்து, கனியிருக்கும் மரத்தினில் காயைப் பறித்து உண்பானேன்!

இனி அன்பை வற்புறுத்தும்— அன்புடைமையின்அவசியத்தைக் கூறும் நீதி நூல்களைப் பார்ப் போம்.

திருமூலர் எழுதிய திருமந்திரத் தில் அன்பு என்பது நாம் தெய்வ மாய் வணங்கும்

'சிவமே,

'அன்பும் சிவமும்
இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும்
அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும்
அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே'

என்கிருர். அவர் தெய்வமாய்க் கூறும் அன்பை நாம் ஏன் வாழ்க் கையில் குறிக்கோளாய்க்கொள்ள லாகாது? திருமூலரின் சிந்தனைக்கு மதிப்புக் கொடுக்கும் நாம் அவரது முடிந்து முடிபுக்கு ஏன் மதிப்பளிக்கக் கூடாது ?

இன்னெரு பாடலில் 'அன்போ டுருகி அகங்குழைவார்க்கன்றி என் பொன்மணியினை எய்த ஒண் ணுதே' என்கிருர் திருமூலர். தெய்வத்தை அடையவே அகங் குழைந்து அன்பு செலுத்தலாம் என்ருல் கேவலம், மனிதனை அன்பு செலுத்திக் கவர முடி யாதா? அதன் மூலம் நாம் நற் பெயர் பெற முடியாதா ?

அன்பைத் தெய்வமென்று திரு மூலர் கூறப் பட்டினத்தடிகளோ அதைப் பெறற்கரிய நிதியமாகக் கருதுகிருர். அவரது பாடலில் பட்டவர்த்தனமாக அவர் அதைக் கூருது போனுலும் அப் படிக் கருத இடமிருக்கிறது.

பட்டினத்தார் இறைவனுக் காகத் தன் அன்பையெல்லாம்

சேகரித்து வைத்திருந்தாராம். அதைத் துளியும் வீணாக்காது ஏற்றுக் கொள்வீர் என ஆண்டவனிடம் இறைஞ்சுகிறார். 'ஆற்றில் கரைத்த புளியாக்கிடாமல் என் அன்பையெல்லாம்போற்றித் திருவுளம் பற்றுமையா' என இறைவனிடம் அவர் கெஞ்சுவதைக் காணும்போது 'அன்பை' அவர் எவ்வளவு மதிக்கிறார் என்பதை உணரலாம். 'பவுனை வீணடிக்காமல் வேலை செய்யுங்கள்' என்று நாம் பத்தரிடம் வேண்டுகோள் விடுவது போல், இந்தப் பக்தர் இறைவனிடம் வேண்டுகோள் விடுக்கிறார்.

தாயுமானவர், இறைவனின் சீரடித்தாமரைக்கு அன்பு செய்வதுதான் நல்ல புண்ணியம் செய்த நாள், அப்படி அன்பு செய்யாத நாட்கள் தீவினை—வெகுதீவினை — இழைத்த நாள் என்கிறார். அன்பு செய்யும் நாள் புண்ணிய நாள் என்றவர், செய்யாத நாள் சாதாரண நாள் என்று நாம் கணக்கிடும் நாளாகக் குறிக்காது. 'தீவினை செய்த நாள்' என்ற முறையை அதற்குத் தருகிறார். ஆக அன்பை இறைவனிடம் இடைவிடாது செய்ய வேண்டுமென்பது அவரது முடிபு.

அன்பு பெருகுமிடம் இன்பம் பெருகுமிடம் என்று உணர்த்த, தாயுமானவர் தமது பராபரக்கண்ணியிலே 'அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே' என்று கூறுகிறார். உயிரைக் காக்க அன்புப் பெருக்கம்தேவையென்றும் இதன் மூலம் தெரிகிறது.

வடலூர் ஐயாவும் அன்புடைமை எவ்வளவு அவசியம் என்பதைத் தானே அன்பு மயமான வாழ்க்கை வாழ்ந்துகாட்டியுள்ளார்கள். 'ஜீவகாருண்யமே திறவுகோல்' எனக் கூறிவிட்டார்கள் என்றால் அன்பின் மூலம், கருணைமூலம் நாம் எப்பேர்ப்பட்ட பேறுகளை இகத்திலும், பரத்திலும் பெறலாம் எனக் கூறத் தேவையில்லை.

அன்பற்ற முறையில் குழந்தைகளிடம் நடந்துகொண்ட ஒரு ஆசிரியரைக் கண்டு, 'இனி அப்படி நடக்காதீர்' என்று வடலூர் ஐயா நெக்குருக வேண்டிக் கொண்ட முறை கூட அன்போடு அமைந்ததைக் காணும்போது அன்பற்ற முறையில் நாம் வாழ்வதும் ஒரு வாழ்வா என நாணித் தலை குனிய வேண்டியிருக்கிறது!

புராணிகர் சுந்தரம்பிள்ளைஎன்பவர் வடலூர்ஐயாவின் நண்பர். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பவர். ஆனால் அவர்களது தவறைத் திருத்த, அடித்துத் துன்புறுத்துவதையே வழக்கமாகக் கொண்டவர், இதை ஒரு நாள் கண்ணுற்ற ஐயா அவர்களது உள்ளம் அழுதது. அவர் செய்கையைக் குற்றமென்று அன்போடு கூறிய வாக்கு வருமாறு:

படிப்பது நன்று எனத் தெரிந்து
பாங்குடையாய்!
மன்னுள் வெளிப் பரமன் அன்பே
தடிப்பது நன்று எனத் தெரிந்த
சதிர் உடையாய்!
அறம் நவின்ற தவத்தாய் வீணில்
துடிப்பது இலாத் தூயமனச்
சுந்தரப்பேர்
உடையாய்! என் தோழ! கேள்நீ!

அடிப்பதும், அச்சிறுவர்களை
அடிப்பதும், நன்று
அல; என்மேல் ஆணை! ஆணை!

இது உள்ளத்தைஉருக்கும்பாடலல்லவா! அன்போடுகூறிய பான்மையில் தான் இது சாத்யமாயிற்று எனக்கூறவும் வேண்டுமா! இது புராணிகர் சுந்தரம் பிள்ளைக்கு மட்டும் விடுத்த வேண்டுகோள் அல்ல!

துறவறத்திற்குத் தேவையென்று கூறப்பட்ட 'அருள்' என்கிற குழவியைப் பெற்ற தாய் அன்பு என்கிற பண்புதான் எனக் கூறுகிறார் வள்ளுவர். அது:

'அருள் என்னும் அன்பு ஈன்குழவி
பொருள் என்னும் செல்வச்
செவிலியால் உண்டு'

என்னும் குறளால் விளங்கும் அன்புடைமையை தனிஅதிகாரம் கொடுத்துப் பத்துக் குறள்களில் வள்ளுவர் கூறுவதோடு, நூல் முழுவதும் அன்பின் பெருமையை விரவிக் கூறவும் செய்கிறார்.

அன்பிலார் பிறர்க்கு உபயோகமில்லாதவராதலால் அவர் தமக்கே உரியவர் என்றும், அன்புடையார் உள்ளத்தால் மட்டுமின்றி உடலாலும் பிறர்க்குரியவர் என்றும் வள்ளுவர் கூறுகிறார். தன் உடற் சதையை அரிந்து பருந்துக்கு இட்டு, புறவின் உயிர் காத்து உதவிய சிபிச் சக்கரவர்த்தியின் அன்பே இந்த இடத்தில் நம் நினைவுக்கு வருகிறது.

'என்பற்ற உடல் வெயிலில் காய்ந்து வெம்புவதுபோல் அன்பற்ற உயிரை அறக்கடவுள் வருத்துவார்' என்றும் திருவள்ளுவர் கூறுகிறார். எப்படியாவது மனிதனை அன்புடையவனுக்குவதில் தான் அவரது நாட்டமெல்லாம். அதனால்தான் உயிர் பெற்ற உடம்புக்கு அன்பு அவசியம்; அது இல்லாத உடம்பு என்பும், தோலும் போர்த்திய உடம்பு என்று கூறி அன்பற்ற தன்மையைப் பரிகசிக்கிறார் அவர்.

அஃறிணைப் பிறவிகளிடம் கூட அன்பு செலுத்திய பாரி, பேகன் போன்ற வள்ளல்களையும் நாம் நினைவு கூறல் வேண்டும். அப்படிப்பட்ட நெகிழ்ந்த உள்ளம்தான் இப்பேற்பட்ட உதவி யளிக்க முன் வரும்.

அன்பு செலுத்துவதில் நமக்கு யாதொரு நட்டமும் இல்லை. அமரகவி பாரதி, 'நமக்குத் தொழில் அன்பு செய்வது, தின்ன வரும் புலியைக்கூடச் சிந்தையில் வை, அன்னை பராசக்தியே அவ்வுருவாயினள்' என்று கூறுகிறார்.

நீதி என்ற தலைப்பில் பாரதியார் அவர்கள் எழுதியுள்ள புதிய ஆத்திச்சூடியில், 'நமக்குத் தொழில் அன்பு செய்தல்' என்று எழுதிய அவர், தம்பாட்டுச்செய்யும் தொழிலில் அன்புத்தத்துவம் விளங்கவேண்டும் என்பதற்காக, 'பாட்டினில் அன்பு செய்' என்கிறார். தாம் கொண்டுள்ள அசையாத அன்புடைமைக் கொள்கையால் ஆண்டவனும் தம்மிடம் அன்போடு இருக்கிறான் என்பதை நம்பித் தமது பாப்பா பாட்டில் 'துன்பம் நெருங்கி வந்தபோதும் நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா, அன்பு மிகுந்த தெய்வம் உண்டு, துன்பம் அத்தனையும்

போக்கிவிடும் பாப்பா' என்று கூறுவதோடு முரசுப் பாட்டிலும் கூடப் பல இடங்களில் அன்பு, அன்பு என முழங்குகிறார்!

இக, பர வாழ்வுகளுக்கு அன்புடைமை அவசியம். சென்று மறைந்த உடலும், நின்று நிலவும் புகழுமாக உள்ள பெரியோர்களைப் போல் நாம் பாட்டினில் அன்பு செய்யும் புலமை பெற்றிராவிட்டாலும், சிந்தையில் அன்பு செய்வோம், பேச்சினில் அன்பு செய்வோம். பிறருடைய கஷ்டங்களைக் கண்டு நாம் கண்ணீர் விட்டால், நம் கஷ்டங்களுக்குக் கண்ணீர்விட நண்பர் குழாம் பெருகும். நண்பர் குழாம் பெருகப் பெருக — அன்புள்ளங்கள் விவாதிக்க, விவாதிக்க-புதிய கருத்துக்களைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மனித ஒருமைப்பாடும் சமுதாய ஒருமைப்பாடும் வளர இதுவே அடிக்கல் எனக் கூறத் தேவை இல்லை.

ஒருமைப் பாட்டுணர்ச்சி ஆண்டவனது அருளைச் சுரக்கச் செய்ய ஒரு சாதனம்தானே!

'உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்'

—பாரதியார்

ஆலயங்கள்
ஆயிரமாயிரம்
சமைத்து விட்டதால
உள்ளமும் பண்பும்
உயர்ந்துவிடுமா ?

# பண்பாடு பயிரிடப் பட வேண்டும்

இரா. சந்தானம்

அருளாளர்கள் வாழ்ந்த நாடு பாரதம். இந்தப் பாரதம் பழம் பெருமையைப் பேசும் நாடாகி வருகிறதேயன்றி, பழம்பெருமை யைக் காப்பதில் தவறிவருகிறது. பாரதத்தின் தனித்துவம் இன்று இல்லையென்ற பொருளாகி வரு வது மிகவும் வருத்தப்படற் குரியது.

ஏன் இந்த அவலமான நிலை ? சிறிது சிந்திப்பதுடன் அதற்கான ஆக்கத்திற்கும் துணியவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக் கம். இன்னதென்று தெரிந்து தெரிந்துதானே வைத்தியம் செய் யப்படவேண்டும்.

நம் மக்கள் யாவரும் தம் பொறுப் புணர்ச்சியை மறந்ததே முழு முதற்காரணமாகக் கொள் ளலாம். பண்பையும் மறந்தோ அல்லது அதைவிட்டுச் சற்று வில கியோ இருப்பது மேலும் சொல் லக்கூடிய காரணங்களாகும்.

ஆண்டாண்டுக் காலமாக நமக்கிருந்து வந்த இந்தப் பண் பாடும், பொறுப்புணர்ச்சியும் இன்று மட்டும் 'எங்கே' ஒளிந்து கொண்டன?

கல்வியின் தரம் குறைந்தது. அத்துடன் சமய அறிவும் வழி பாடும்இல்லாமல்போனது. 'எத் தனைக் கோயில்கள் புணருத்தார ணம் செய்யப்பட்டு வருகின்றன! இந்த அளவில்எந்தக்காலத்திலும் நடந்ததேயில்லை என்று துணிந்து கூறலாமே' என்று சொல்லுவார் கள். ஆலயங்கள் ஆயிரமாயிரம் அமைத்து விட்டதால் உள் ளமும் பண்பும் உயர்ந்து விடுமா என்ன!



மாணவப்பருவம் மகத்தானது. என்றுஇக்கட்டுரைஎழுதும்போது கூட அந்தப் பருவம் போய்விட்டதைஎண்ணி ஏங்குகிறேன். அந்தப் பொன்னன காலம் எப்படிச் செம்மையுற வகுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தே நாட்டின் குணநலன்கள் அமையும். இன்று சீனவில் நிகழும் ஒவ்வொரு புரட்சியும் இதை அடிப்படையாக வைத்தே நடைபெறுகின்றன.

மாணவர் வாழ்க்கையில்தான், 'தான் நினைப்பதையெல்லாம் செய்ய இயலும், சீக்கிரம் பரவும்' என்ற மாசேதுங்கின் எண்ணம் தான் இன்று 'செங்காவலர்கள்' பட்டத்துடன் புரட்சியாக நடக்கிறது.

அந்த நாட்களில் மாணவர்கள் குருகுலவாழ்க்கையில்தான் படிப்பைப் பெற்று உயர்ந்திட முடியும் என்ற நிலை இருந்தது. அதற்குத் தகுந்தவசதியும் வாய்ப்பும்உள்ளவர்கள்தான் குருகுலத்திற்கு வந்தார்கள். மேலும் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதில் ஆசிரியர்கள் முழுப் பங்கு ஏற்றனர். பெற்றோர்களும் அதற்குத் தங்கள் முழு இசைவை அளித்தனர். இதனல் மாணவர்களின் படிப்பு, பண்பாடு, பழக்க வழக்கங்கள் சீராகக் கண்காணிக்கப்பட்டு உயர்வு அடைந்தன.

இக்காலத்துப் படிப்பையும் மாணவர்களின் நிலையையும் எண்ணி எண்ணி வருந்தவேண்டி இருக்கிறது. காரணம், மாணவர்களைக் கண்டு ஆசிரியர்கள் பயப்படும் அளவுக்குக் காலம் மாறிவிட்டதுதான்! சிறு சந்தர்ப்பத்தில்கூட மாணவர்களைக் கண்டிக்கும் உரிமை பெற்றோர்களால் வழங்கப்படவில்லை. குறுக்கீடுதான் அதிகமாகிவிட்டது. பெற்றோர்களின் தலையீடு காரணத்தால் மாணவன் துணிவுமிகப் பெற்றுவிடுகிருன். ஆசிரியரும் மாணவனின் கண்ணுக்குச் சிறு துரும்பாகி விடுகிருர்!

ஒருவருக்கொருவர் கொள்ள வேண்டிய மரியாதை, அன்பு இல்லாமல் போய்விட்டது. போலித்தனம்தான் தலைதூக்கிநிற்கிறது. மாணவர் ஆசிரியர் இடையேதான் உறவு சீர்கெட்டது என்றுல் கல்வியின் தரமும் அதைவிட மோசமான நிலைக்கு வந்துவிட்டது. சுதந்திரத்துக்குப்பின் படிப்புக்கான கொள்கைகளில் எத்தனை மாற்றங்கள்? அடுத்த கல்வியாண்டில் என்ன என்ன மாறுதல்கள்? யாரும் அறியார்!

எல்லாவற்றிற்கும் சிகரமாகச் சமயக்கல்வி ஏறக்குறைய இல்லாமலே போய்விட்டது என்பதாகும். சமயம் பற்றியும் சமயக் கல்வி பற்றியும் இக்காலத்தில் எழுதினலோ பேசினலோ நகைப்புக்குள்ளாக வேண்டியதுதான்! 'இந்த அணுயுகத்தில் பேசவேண்டிய பேச்சா இது!' என்று கூறுவார்கள். மேலும் சமயச் சார்பற்ற நம் நாட்டில் எவ்விதம் சமயக்கல்வியை அளிப்பது எனக் கேட்கலாம் சிலர்.

விஞ்ஞான அறிவிலும், மற்றும் நாகரிகத்திலும் சிறந்த உயர்ந்த நிலை பெற்றிருப்பதாகக் கருதப்படும் மேலை நாட்டினர் இன்றுங் கூடப் பழைய பழக்கவழக்கங்களை விட்டு விலகாமலும் குறிப்பிட்ட காலங்களில் தெய்வ வழிபாடு செய்வதையும் இன்றும் காண

லாம். உலகில் அளவில் மிக வளர்ந்து பரவியிருக்கும் கிறிஸ்துவ மதத்தினர் இன்றைக்கு சமயப் பிரசாரத்தை நிறுத்திவிடவில்லை. இதைக் கண்டாவது நாம் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டும்.


அவர்களிடமிருந்து புதிய நாகரிகப் பழக்கங்களையும் விஞ்ஞான அறிவையும், தேவையற்ற பலவற்றையும் தெரிந்து கொள்ளத் தயாராயிருந்த நாம் தொன்மையான பழக்க வழக்கங்களைக் கைவிடாத அவர்கள் பண்பை மட்டும் பின்பற்ற மறுப்பதும், பின்பற்றுவோரைக் கேவலமாக எண்ணுவதும் வேதனை மிகத் தரக்கூடியவை!

ஆகையால் நம் மக்களின் பண்பாடு சரியான நிலைக்குப்பயிரிடப்பட வேண்டும். அப்பண்பாடு பயிரிடப்பட வேண்டிய சரியான நிலம், காலம் எல்லாம் பொருந்திய இடம் பள்ளியேயாகும்.

பள்ளியில் பண்பாடு பயிரிடப்பட எல்லாரும் ஆவன செய்ய வேண்டும். ○



வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை. 4, தணிகாசலம் செட்டி ரோடு. சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.



மாத இதழ்
விலை 30 காசு
ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்

அருள்-3
கருணை-3
மார்கழி, கீலக
டிசம்பர்
15-12-68
விலை: 30 காசு



ஸ்ரீ இராமகிருஷ்ணர்

# மானுடப் பிறவியின் பயன்:

1. நாம் மானுடப் பிறவி யெடுத்திருப்பது கடவுளை வழுத்தி அவரை அடைதல் பொருட்டேயாம்.

2. ஆத்மபோதம் அடையப் பெறாத மானுடப் பிறவி அனர்த்தமானது. ஆத்ம போதம் அடையப் பெற்றவன் பேரியல்பும் பேரூக்கமும் வாய்க் கப்பெற்றவனாக இருக்கிறான்.

3. முதலை தண்ணீரில் இங்கு மங்கும் நீந்திக் கொண்டிருக் கிறது. ஆனால் அதன் எண்ணம் எங்கேயிருக்கிறது என்று தெரி யுமா? தரையில் முட்டை வைத் திருக்கிற இடத்தில் அதன் எண் ணம் இருக்கிறது. அதே விதத்

தில் உலகில் உனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளைச் செய்து கொண்டிரு. அதற்கிடையில் மனதைக் கடவுளிடம் வை.

4. கொழுக்கட்டைகள் வெளிப் பார்வைக்கு ஒரேவிதமாய்த் தென்படுகின்றன. ஆனால் அவைகளுள் வெவ்வேறு பூரணங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மக்களின் இயல்புகளும் அப்படிப் பட்டவைகளே.

5. மானுட உடல் ஒரு தலையணை உறை போன்றது. அதனுள் பஞ்சு போன்ற எதை வேண்டுமானாலும் போட்டு வைக்கலாம். ஆனால் பக்தன் ஒருவனுடைய உள்ளமோ ஈசனுடைய ஆலயம் ஆகிறது.

6. உண்மை ஒன்றை இயம்புகிறேன், கேளுங்கள். நீங்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அதற்கிடையில் உங்கள் மனதை இறைவன் பால் திருப்பவேண்டும். இல்லையேல் உங்கள் வாழ்வு அனர்த்தமாய்ப் போய்விடும்.

7. ஒரு கையைக் கொண்டு உலகக் கிருத்தியங்களைச் செய்யுங்கள். அடுத்த கையில் இறைவனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். உலகக் கிருத்தியங்கள் முற்றுப் பெற்றான பிறகு இரு கரங்களையும் கொண்டு இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளலாம்.

8. பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றிருப்பதன் நோக்கம் சர்வேசுவரனுடைய திருவடிகளில் மாறாத பக்தி வைத்தல் பொருட்டேயாம். அகண்ட வஸ்துவாகிய பரமனை அறிந்துகொள்ள மானுடனுக்கு இயலாது; அதையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. பக்தியொன்றிருந்தால் போதுமானது.

9. முதலில் ஈசுவரனைத் தேடு. அதன் பிறகு உலகப் பொருள்களைத் தேடலாம். இதற்கு மாறாக உலகப் பொருள்களைத் தேடுவதிலேயே நீ மூழ்கிவிடுவாயாகில் இறுதியில் துன்பத்துக்கு ஆளாவாய்.

10. மனிதனுடைய எண்ணத்துக்கேற்றவாறு அவனுக்கு வாழ்க்கையில் பயன் கிடைக்கிறது. ஒரு மனிதன் படாத பாடுபட்டுக் கல்வி பயின்று கல்வியில் மேல் நிலைக்கு வந்து, ஒரு நீதி மன்றத்தில் நியாயாதிபதி ஆகிறான். 'இப்போது நான் உயர்ந்த பதவியில் இருக்கிறேன். சம்பத்து அனைத்தையும் அடையப்பெற்று இன்புற்றிருக்கிறேன்' என்று எண்ணுகிறான். அப்பொழுது அவன் உள்ளத்தினுள் மனசாட்சியாயிருக்கும் ஈசன் 'நீ இப்பெரு நிலையில் இன்புற்றிருப்பாயாக' என்கிறார். பிறகு அம்மனிதன் விருத்தாப்பியத்தில் உத்தியோகத்தினின்று விலகி உபகாரச் சம்பளம் பெற்று வாழ்ந்திருக்கும்பொழுது தனக்கு அந்திய காலம் அணுகுவதை உணருகிறான். 'ஐயோ, நான் இம் மானுடப் பிறவியில் சாதித்தது என்ன' என்றெண்ணி மனங் கலங்குகிறான். அப்போது உள்ளிருக்கும் ஈசன் 'ஆம், நீ சாதித்தது ஒன்றுமில்லை' என இயம்புகிறார்.

## மனிதனது பேரியல்பு

11. அனைத்துமாயிருப்பவன் ஈசனே. அவ் அனைத்தினுள் மானுடனே ஈசனுடைய மிக மேலான தோற்றமாகிறான்.

12. மாத்ரு பக்தி, பித்ரு பக்தி ஆகிய இந்த இரண்டையும் சரியாக அடையப் பெறாதவனுக்கு தெய்வபக்தி ஒருநாளும் வராது. தாய்தந்தையர் துஷ்டர்களாயிருந்தாலும், நெறி வழுவியவர்களாயிருந்தாலும் மைந்தன் அவர்களுக்குத் தக்க மரியாதை காட்டக் கடமைப்பட்டிருக்கிறான்.

13. குடும்பஸ்தன் ஒருவன் தன் மனதில் ஒரு பகுதியை தெய்வ வழிபாட்டுக்கென்றே ஒதுக்கி வைக்க வேண்டும். கால் பங்கு மனதைக் கடவுளுக்குக் கொடுத்துவிட்டு முக்கால் பங்கு மனதைக்கொண்டு உலகக் கிருத்தியங்களை அவன் செய்யட்டும். ஆனால் சாது ஒருவன் முக்கால் பங்கு மனதைக் கடவுளுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். கால்பங்கு மனதைக் கொண்டு தேக சம்ரக்ஷணை போன்ற காரியங்களை அவன் பார்த்துக்கொள்ளட்டும்.

14. கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருப்பவைகளை யெல்லாம் கண்ணாடியின் மூலமாகப் பார்ப்பது போன்று ஒருவனுடைய கண்ணின் மூலம் அவன் உள்ளத்திலிருப்பதை யெல்லாம் காணலாம்.

15. மக்களுள் நான்கு தரத்தார் இருக்கின்றனர். பந்த பாசத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் ஒரு கூட்டம்; முக்திக்காக முயலுபவர்கள் மற்றொரு கூட்டம்; முக்தியை அடையப் பெற்றவர்கள் மூன்றாம் கூட்டம்; நித்திய முக்தர்கள் நான்காம் கூட்டம்.

16. உழவுக்குக் காளைமாடு வாங்கப்போகிறவர்கள், அதில் தேர்ச்சி மிகப் பெற்றவர்கள் காளையின் வாலைத் தொட்டுப் பார்க்கிறார்கள். சண்டிமாடு அசையாதிருக்கும் அல்லது படுத்துக்கொள்ளும். ஆனால் சுறுசுறுப்புள்ள காளையோ வாலைத் தொட்டமாத்திரத்தில் துள்ளிக் குதிக்கும். அது வேலைக்கு நன்கு உதவும் என்று உழவர்கள் அதை வாங்குவர். துள்ளிக் குதிக்கிற காளை போன்றவன் நரேந்திரன். தெய்விக சக்தி அவனிடம் ஏராளமாக உண்டு.

17. ஹோமா பறவை ஒன்றின் மகிமையைப்பற்றி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வானத்தில் மிக உயரத்தில் வசிக்கிறது. பூமிக்கு அது ஒரு பொழுதும் வருவதில்லை. வானத்திலேயே அது முட்டையிடுகிறது. அம்முட்டை நிலத்தை நோக்கி விழும் வேகத்தில் வெப்பம் பெற்றுக் குஞ்சு பொரித்து விடுகிறது. விழுகிற வேகத்தில் குஞ்சுக்குக் கண் திறக்கிறது. சிறகு முளைக்கிறது. பூமியில் வந்து மோதினால் அது சிதறடைந்து செத்துப்போம். ஆனால் அதற்கு முன்பே அக்குஞ்சுக்குத் தன் தாயுடன் இருக்க வேண்டிய யதா ஸ்தானத்தின் ஞாபகம் வருகிறது. அக்கணமே அதுமேல் நோக்கிப் பறந்து போய்விடுகிறது. அப்பறவை போன்றவர்கள் நித்திய சித்தர்கள்.

18. கங்காஸ்நானம் செய்வதால் பாபம் போய்விடுகிறது என்பது உண்மை. ஆனால் மக்கள் மீண்டும் பாபம் செய்து பாபிகள் ஆய்விடுகிறார்கள். சாதகன் ஒருவனுக்கு மனவுறுதி வேண்டும். 'இறைவா, இனி நான் பாபம் ஒன்றும் செய்யேன்' என்று அவன் விரதம் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த விரதத்துக்கு ஒப்ப ஒழுகவேண்டும். அத்துடன் இறைவனுடைய நாமத்தை ஜபித்துக் கொண்

டிருப்பவன் சாதனத்தில் முன் னேறுகிறுன்.

19. கடவுளின் மெய்யன்பர்கள் தேன் ஈக்கு ஒப்பானவர்கள். தேன் ஈ அழுக்கு எதிலும் உட்காராது. தன் அடையில் உட்காரும் அல்லது புஷ்பத்தின் மீது அமரும். ஆனுல் உலகப்பற்றையும் கடவுள் பக்தியையும் சேர்த்து அனுஷ்டிக்க முயலுபவர்கள் வீட்டு ஈக்கு ஒப்பானவர்கள். வீட்டு ஈ ஒரு வேளை ஈசுவர நைவேத்தியத்துக்காக வைத்திருக்கும் தூய உணவின் மீது உட்காரும்; அடுத்த வேளை தோட்டி தொட்டியில் சுமந்து செல்லுகிற மலத்தின் மீது உட்காரும்.

20. சாதக; பறவை மழை நீரை மட்டும் அருந்தும். புண்ணிய நதிகள் ஏழிலும் ஏராளமாக நீர்ப்பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தாலும் பூமியில் படிந்த நீரை அப்பறவை அருந்தாது. அங்ஙனம் ஆத்மபோதம் எழப்பெற்றவர்கள் இறைவனுடைய அருளேயே சதா நாடி நிற்பர். உலக விஷயங்களில் தங்கள் மனதை அவர்கள் ஒரு பொழுதும் திருப்புவதில்லை.

21. இளைஞர்களில் சிலர் பக்தியும் தெய்விக உணர்ச்சியும் மிகைப்பட வாய்க்கப்பெற்றவர்களாக இருக்கிறுர்கள். அதற்குக் காரணம் யாது என்று கேட்கலாம். கொழுக்கட்டை வெளிப் பார்வைக்கு எல்லாம் ஒரேவிதமாய் இருக்கின்றன. ஆனுல் உள்ளே சிலவற்றுள் சாமானியமான பயறுவகைகள் எள்ளு வகைகள் அமையப் பெற்றவைகளாக இருக்கின்றன. வேறு சில பாலாடையும் சர்க்கரையும் வைக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. அத்தகைய சுவை நிறைந்த கொழுக்கட்டை போன்றவர்கள் பக்தி நிறைந்த தூய உள்ளம்படைத்த இளைஞர்கள்.

22. பாண்டவர்களுக்கு வனவாச துக்கம் ஒரு பக்கம் இருந்தது எனினும் பகவத் பக்தியும் ஞானமும் சிறிதேனும் அவர்களைவிட்டு அகலவில்லை. அத்தகைய பெரு மக்களைக் காண்பது அரிதிலும் அரிது.


23. பட்டாணிக் கடலை ஒன்று சாணக் குழியில் முளைக்க வேண்டி வந்தாலும் பட்டாணியின் இயல்பை அது இழந்து விடுவதில்லை. சான்றேர் கீழ்க் குடியில் பிறப்பெடுக்கினும் அவர்களுடைய மேலான இயல்பு அழிந்து பட்டுப் போவதில்லை.

24. சேற்று மீன் சேற்றினுள் புதையுண்டு கிடக்கிறது. ஆயினும அம்மீனின்மீது சேறு படிவது கிடையாது. அதே பாங்கில் மனிதன் ஒருவன் உலகில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனுல் உலகப் பற்றினுள் அவன் தோய்ந்து போய்விடலாகாது.

25. கடவுளுடைய மெய்யன்பனுக்குரிய அறிகுறிகள் சில இருக்கின்றன. மகுடி ஊதுவதைக் கேட்டு விஷப்பாம்பு ஒன்று அமைதியுற்றிருப்பது போன்று குரு வாக்கியத்தைக் கேட்டு அவன் அமைதியுறுகிறுன். கேட்டதைக் கிரகிக்கும் சக்தி பக்தனுக்கு உண்டு. ரசாயனம் பூசிய கண்ணுடியில் புகைப்படம் பதிகிறது. வெறும் கண்ணுடியில் அது பதிவதில்லை. பக்தி என்னும் ரசாயனம் பூசிய மனதுடையவனுக பக்தன் இருக்கிறுன். மூன்றும் அறிகுறி ஒன்று அவனிடம் உண்டு. பக்தி படைத்திருப்பவனுக்குக் காமம் இல்லை; ஐம்பொறிகளை அவன் அடக்கியவன் ஆகிறுன். கோபியர்கள் அந்நிலையில் இருந்தார்கள்.

# சினிமாவும்

# தணிக்கையும்



நா. மகாலிங்கம்,

பி.எஸ்ஸி, எம்.ஐ.இ.

இந்திய மக்களுக்கு மிக எளிமையான வகையிலும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய ஒரே ஒரு பொழுதுபோக்கு வாய்ப்பு திரைப்படங்கள்தான். வெறும் பொழுது போக்கு மட்டுமின்றி மன மாற்றத்திற்கும் பொது அறிவு வளர்ச்சிக்கும் பண்பாடு—கலாச்சார—நாகரிக முன்னேற்றத்திற்கும் பயன்படுபவையாக திரைப் படங்கள் இருக்கவேண்டும் என்றுதான் எல்லாரும் விரும்புவார்கள். இந்தியாவில் தொடக்க காலத்தில் இப்படிப் பட்ட எல்லா அம்சங்களும் பொருந்தியவையாகவே இந்தியத் திரைப்படங்கள் விளங்கின.

ஆரம்ப காலத்தில் கலை நுணுக்கத்திலும் தொழில் நுணுக்கத்திலும் இந்தியத் திரைப்படங்கள் பின்னடைந்திருந்தாலும் இந்தியக் கலாச்சாரம்—பண்பாடு ஆகியவைகளைப் பிரதிபலிப்பதாகவும் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மனமாற்றத்தை ஏற்படுத்தி முன்னேற்றத்திற்கு அடிகோலுபவையாகவும் பொது அறிவு வளர்ச்சிக்கு உதவுபவையாகவும் இருந்தன.

ஆனால் இன்று இந்தியத்திரைப் படங்கள் சமுதாயத்தைச் சீர்குலைப்பதற்கென்றே உருவாக்கப் படுகின்றன. இந்தியக் கலாச்சாரம்—பண்பாடு-நாகரிகம் ஆகியவைகளுக்குப் புறம்பாக மட்டுமின்றி இந்திய சமுதாயத்தின் இளஞ் சந்ததிகளின் மனத்தைக் கெடுத்து மயக்கத்திலாழ்த்தித் தவறான பாதைக்குத் திருப்பி விடக்கூடியவைகளாக இந்தியத் திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன.

இப்பொழுது வெளி வரும் திரைப்படங்களைபார்க்கும்போது உண்மையிலேயே இங்கு திரைப் படத் தணிக்கைக் குழு என்று ஒன்று இருக்கிறதா என்ற ஐயமே தோன்றுகிறது. அந்த அளவுக்கு இப்போது வரும் படங்களில் இனக்கவர்ச்சியும் ஆபாசக்காட்சிகளும் இடம்பெறுகின்றன. கால்-அரை-முக்கால் நிர்வாணக் காட்சிகளே அதிக அளவில் இடம் பெறுகின்றன. இன்னும் முழு நிர்வாணக் காட்சிகள்தான் இடம் பெறவில்லை.

குளியலறைக் காட்சிகளும் படுக்கையறைக் காட்சிகளும் ஆடைக் குறைப்பும் கவர்ச்சிப் பகுதிகளை எடுத்துக் காட்டும் கேமராக் கோணமும் மட்டும் இருந்தாலே ஒரு படம் வசூலில் வெற்றியடைந்துவிட முடியும் என்று தயாரிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பது இப்போது வெளிவரும் படங்களைப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

குடும்பத்தோடு சென்று பார்க்கக்கூடிய வகையில் திரைப்படங்கள் வெளிவருவது அரிதிலும் அரிதாக இருக்கிறது. அந்த அளவு காட்சிகளிலும் வசனங்களிலும் — பாடல்களிலும்கூட ஆபாசங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு காலத்திற்கேற்றவாறு தனது கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு முழக்கம் இப்பொழுது வெகுவாகத் திரைப்படத் தொழில் வட்டாரத்தில் அடிபடத் தொடங்கியிருக்கிறது. இந்த முழக்கம் வலுப்பட்டதாலேயே இதற்கென திரைப்படத் தணிக்கைபற்றி ஆராய்வதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு அதன் விசாரணையும் நடைபெற்றிருக்கிறது.

இதைப் பார்க்கும்போது இந்தியாவில் திரைப்படத் தணிக்கை முறை மிகமிகக் கடுமையாக இருப்பதுபோலவும் அது தளர்த்தப்பட வேண்டும் என்று திரைப்படத் தொழில் வட்டாரம் நடத்திய கிளர்ச்சியை முன்னிட்டே இப்படி ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருப்பது போலும் தோன்றும்.

ஆனால் இன்று இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழுவின் நிலை என்ன? உண்மையிலேயே மனப்பூர்வமாக இந்தியக் கலாச்சாரம்—பண்பாடு காக்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடுதான் இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு செயல்படுகிறதா? இந்தக் கேள்விக்கு எனது ஒரே பதில் இங்கு திரைப்படத் தணிக்கைக் குழு என்ற ஒன்று இல்லவே இல்லை என்பதுதான்.

பெயருக்கு ஒரு தணிக்கைக் குழுவாக இந்தியத் திரைப்படத் தணிக்கைக்குழு செயல்பட்டகாரணத்தால்தான் இன்று ஆபாசத்திற்கு வக்காலத்து வாங்கும் ஒரு போக்கு இங்கு வளர்ந்து விட்டது.

கோவில் சிலைகளைப் பாருங்கள். கோட்டை மதில்களைப் பாருங்கள். பழங்கால ஓவியங்களைப் பாருங்கள் என்றெல்லாம் ஆபாசத்திற்கு வக்காலத்து வாங்குவோர் வாதம்செய்யத்தொடங்கி விட்டனர்.

கோவிலிலுள்ள சிலை யாருடையது? அந்தச் சிலை வடிவில் வேறு எந்தப் பெண்ணாவது சமுதாயத்தில் உலாவுகிறாளா? அல்லது சமுதாயத்தில் உலவுகின்ற குறிப்பிட்ட ஏதாவது ஒரு பெண்ணின் நிர்வாணச் சிலைகள் அங்கு வைக்கப்பட்டுள்ளனவா? இல்லையே! ஆனால் திரைப்படங்களில் நிர்வாணமாக வரும் நடிகைகள் இந்த சமுதாயத்தில்தானே உலாவுகிறார்கள்? அவர்கள் படத்தில் நிர்வாணமாக வருவதைப் பார்ப்பவர்களுக்கு அந்த நடிகைகளின் இனக்கவர்ச்சியல்லவா மனக் கண்முன் வந்து நிற்கும். அதுவும் யாருடைய பார்வையும் கவரக்கூடிய நிலையில் கோவில்களிலும் கோட்டைகளிலும் சிலைகள் இல்லை. அங்கெல்லாம் இருக்கும் சிலைகள் கல்லாகவும் மண்ணாகவும் மரமாகவும் தான் காட்சி அளிக்கின்றன. ஆனால் அதே சிலைகளை கேமரா மூலம் பல்வேறு கோணங்களில் கவர்ச்சிப் பகுதிகளை மட்டும் எடுத்துக் காட்டும் போது நிலைமை முற்றிலும் மாறுபடுகிறதல்லவா? இதைக்கூட உணராமல் சிலர் கோவில் சிலைகளையும் திரைப்பட ஆபாசக் காட்சிகளையும் இணைத்து முடிச்சுப் போட்டு விவாதிக்கத் தொடங்கியிருப்பதற்குக் காரணம் இங்கு திரைப்படத்

தணிக்கைக் குழுக்கள் வெறும் பொம்மைக் குழுக்களாக இருப்பதுதான்.

மீறிக் கேட்டால் மேல்நாட்டுப் படங்களோடு இந்தியப் படங்களும் போட்டியிட வேண்டிய நிலையிருக்கிறதே என்ன செய்வது? என்று சமாதானம் கூற முன் வருகிறார்கள்.

மேல்நாட்டுப் படங்களில் நிர்வாணக் காட்சிகளும் முத்தக் காட்சிகளும் இடம் பெறுவதால் அவைகளைப் பார்ப்பதற்கே அதிக அளவில் மக்கள் செல்வதாகவும், எனவே அவைகளைவிட இன்னும் கொஞ்சம் கவர்ச்சியாக இந்தியப் படங்களின் பக்கம் இழுக்க முடியும் என்பது திரைப்படத் தொழில் வட்டாரத்தின் வாதமாகும்.

ஆனால் உண்மையில் மேல்நாட்டுப் படங்களைப் பார்க்கச் செல்பவர்கள் அவைகளில் இடம் பெறும் நிர்வாணக் காட்சிகளைக் காண்பதற்காகவேதான் செல்கிறார்களா என்பதை யாரும் ஒரு கேள்வியாகப் போட்டுப் பார்த்துக்கொண்டதில்லை. மேல்நாட்டுப் படங்களில் நிர்வாணக் காட்சிகளும் முத்தக் காட்சிகளும் வரும்போது அவை அந்தந்த நாட்டுக் கலாச்சாரம் பண்பாடுகளோடு ஒட்டி வருவதால் எந்த விதமான கூச்சமும் இல்லாமல் ரசிக்க முடிகிறது. ஆனால் அதே போல் இந்தியப் படங்களில் இந்திய நடிகைகள் தோன்றுவார்களேயானால் உள்ளம் குமுறுகிறது—கூசுகிறது. இதுதான் உண்மையான நிலை. அத்துடன் மேல்நாட்டுப் படங்களில் கையாளப்படும் கலை நுணுக்கங்களும் தொழில் நுணுக்கங்களும் நம் நாட்டு மக்களை வெகுவாகக் கவர்கின்றன என்ற உண்மையையும் நமது தயாரிப்பாளர்கள் உணர வேண்டும். அப்படி அவர்கள் உணர்வார்களேயானால் கலை நுணுக்கத்திலும் தொழில்நுணுக்கத்திலும் மேல்நாட்டுப் படங்களோடு போட்டியிடக் கூடிய வகையில் முன்னேறி நமது நாட்டு ரசிகர்களை வெகுவாகக் கவரமுடியும்.


இதை விட்டு விட்டு மேல்நாட்டுப் படங்களில் நிர்வாணக் காட்சிகள் இடம் பெறுகின்றனவே! முத்தக்காட்சிகள் இடம் பெறுகின்றனவே! அதுபோலவே இந்தியப் படங்களிலும் ஏன்அனுமதிக்கக்கூடாது? என்று கேட்பது அறிவுக்குப் புறம்பான வாதமாகும். மேல்நாட்டுப் படங்களில் இடம் பெறும் ஆபாசக் காட்சிகளெல்லாம் இந்தியப் படங்களிலும் இடம் பெறத் தொடங்கிவிட்டால் நிலைமை என்னவாகும்? ஸ்வீடனிலும் பிரான்சிலும் ஆணும்பெண்ணும் கூடுகின்ற காட்சிகளைக் கூடத் தான் காட்டுகிறார்கள். அதே போன்ற காட்சிகள் இந்தியப் படங்களிலும் இடம்பெறத்தான் வேண்டுமா? என்பதையெல்லாம் யோசிக்காமலே வெறும் வசூல் கண்ணோட்டத்தோடு மட்டும் வாதக்களத்தில் குதித்து விடுகின்றனர் நமது தயாரிப்பாளர்கள்.

இந்திய சமுதாயத்திற்காகவும்-இந்திய சமுதாயத்தைப்பற்றி பிறநாட்டு மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்யவும்தான் இந்தியாவில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே அவைகள் இந்திய சமுதாயத்தின் பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் ஆகிய கோணங்களுக்கு உட்பட்டே இருந்தாக வேண்டும் என்று விரும்புகின்றேன்.



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
Kali
mark
ஸ்டூடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

# மது விலக்குத் திட்டம்



முன்னாள்
தமிழக முதலமைச்சர்

**எம். பக்தவத்சலம்**

"குடிப்பழக்கம் உலகெங்கும் இருக்கிறது. இத்தீய பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதே பல நாடுகளின் விருப்பம். ஆனால் அங்கெல்லாம் வெற்றி பெருத மதுவிலக்குத் திட்டம் இந்தியாவில்தான், மகாத்மா காந்தியின் தலைமையில், உறுதியோடு ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரும் அளவு வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## ஆச்சரியமான பேச்சு

பாமர மக்கள், ஏழை மக்கள் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலேதான் மது விலக்குத் திட்டம் உருவாக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆனால், அதிலே குற்றம் செய்கின்றவர்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராமல் இருந்தாலே நலம்என்று சிலர் கூறுவது ஆச்சரியத்தை விளைவிக்கிறது!

"மது விலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை, அது தொல்லையைத்தான் அளிக்கிறது; போலீஸ்காரர்கள் பிடிக்கிருர்கள்; விலங்கு போடுகிருர்கள்—குற்றம் செய்கின்றவர்களை, இம்மாதிரித் தொந்தரவு ஏற்படுவதால் மதுவிலக்குத் திட்டமே வேண்டாம்" என்ற முறையில் சிலர் பேசுகிருர்கள்.

## காந்திஜியும் சட்டமும்

மதுவிலக்குத் திட்டத்திற்காகச் சட்டம் செய்யக் கூடாது. ஜனங்களாகவே மனம் மாறி மதுவை ஒழிக்க வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னதாகவும் சிலர் குறிப்பிடுகிருர்கள். மதுவிலக்குக்காகச் சட்டம் செய்யக் கூடாது என்று காந்தியடிகள் எங்கே கூறினுர்கள்?

காந்திஜி வாழ்ந்த காலத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்தது. அப்பொழுது நடைபெற்ற ராஜ்ய அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் அப்போதைக்கப்போது பல அரசாங்க நிர்வாக விஷயங்களைப்

பற்றிக் காந்தியடிகளிடம் கலந்து கொண்டுதான் முடிவு செய்து வந்தனர். அவைகளை நிறை வேற்றிக்கொண்டும் வந்தார்கள். ஆகவே காந்தியடிகள் சட்டம் வேண்டாமென்றுசொல்லவில்லை. சட்டம் வேண்டாம் என்ற அபிப் பிராயம் யாருக்காவது இருந் தால் அதற்குக் காந்தி அடிகளை மேற்கோளாக—தவறுதலாகக்—கூறவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## சட்டத்தின் பயன்

மதுவிலக்குச் சட்டம் நிறை வேற்றப்படுவதனுல் மக்களுக்கு மிச்சம் ஏற்பட்டது. முன்பு மது வினுல் சர்க்காருக்கு 16 கோடி ரூபாய் வந்திருந்தால் இப்போது 10 கோடி ரூபாயாவது மக்களி டத்திலே தங்கியிருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனுல் அது மக்களுக்கு மிச்சமாகி என்ன பயன்? அனுவசியமான வழியில் செலவு செய்து விடுகிருர்களே! என்று சிலர் குறிப்பிடுவதை நான் வரவேற்கிறேன். மதுவிலக்குத் திட்டம் வெறும் ஒழிப்பு இயக் கம் இல்லை. மக்களுடைய வாழ்க் கையை வளர்க்கும் திட்டமும் ஆகும். தங்களிடம் மிச்சப்படு கிற பணத்தை அவர்கள் நல்ல வழியில் உபயோகித்துத் தங்கள் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் நான் வரவேற்கிறேன்.

அப்படிச் செய்யாமல் அவர் கள் சினிமாவுக்குப் போகிருர் களே என்று சிலர் வருத்தப்படு கின்றனர். சினிமாவுக்குப் போவது அவசியம்தான். வாழ்க்கை என்பது தினந் தின மும் சாப்பிட்டுக் கொண்டிருப் பது மாத்திரம் அல்ல. சாப்பிடு வது மட்டும்தான் வாழ்க்கை என்ருல் அதில் சுவை யெதுவும் இருக்காது. மனித வாழ்க்கைக் குச்சினிமாவும் ஒரு முக்கியமான சாதனம். ஆனுல் எப்படிப் பட்ட சினிமாவுக்குப் போகவேண்டும் எப்படிப்பட்ட கெட்ட சினிமாவுக்குப் போகக் கூடாது என்பதைக் கவனித்துப் போகவேண்டும். கிராம வாழ்க் கைக்கு உகந்த, நல்ல முறையில் ஒழுக்கத்தைச் சரிப்படுத்தக்கூடிய சினிமாப் படங்களுக்குப் போக வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட வேண்டும். இப்படி அவசியமான செலவுகளைச்செய்து கொள்ளத்தான் வேண்டும்.

## நன்மை விளக்கப் பணி

மற்ருென்று நான் அடிக்கடி வற்புறுத்துவது உண்டு. தொழி லாளர்கள், தொழிற் சங்கங்கள், தொழில் நிர்வாகம் இவைகள், குறிப்பாக இந்த மதுவிலக்குத் துறையில் அதிக கவனம்செலுத்த வேண்டும் என்று சொல்வேன். மதுவிலக்கிஞல் ஏற்படக் கூடிய நன்மையை வற்புறுத்தி அவர்கள் இந்தக் குடிப்பழக்கத்திற்கு இரை யாகாமல் கவனித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

பிரசாரம் செய்வது அவசியம் என்று சொல்லப்படுகிறது. நான் தெரிவிக்க விரும்புவது என்ன வென்ருல், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அரசாங்கத் தின் சார்பாகப் பிரசாரம்செய்ய வேண்டிய அவசியத்தின் காலம் தீர்ந்து விட்டது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

மது விலக்குத்திட்டம் 1937-ம் ஆண்டிலே முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அப்பொழு தெல்லாம் பிரசாரத்திற்கு மிகுந்த கவனம் அரசாங்கத்

தாரால் செலுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது அரசாங்கமே நேரிடையாகப் பிரசாரம் செய்வதற்கு அவசியம் இல்லை என்பது தான் அரசாங்கத்தினுடைய கருத்து. பிரசாரம் செய்யப்பட்டு விட்டது. குடிப்பது தவறு, குடிப்பது குற்றம் என்பதை எல்லோரும் உணருகிறார்கள். இனிச் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துவதுதான் அரசாங்கத்தினுடைய பொறுப்பு.

## தொழிலாளர் மத்தியில்...

ஆனால், ஓரளவு பிரசாரம் வேண்டியிருக்கிறது. வேறு வகையிலே வேண்டியிருக்கிறது. ''இம்மாதிரிக் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு அவதிப்பட வேண்டாம்'' என்ற பிரசாரம் வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசாரத்தைப் பொது மக்கள் செய்யவேண்டும். பொதுமக்களுடைய பிரதிநிதிகள் இதிலே அக்கறை கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். முக்கியமாகத் தொழிலாளர் தலைவர்களாகவும், தொழிலாளர் பிரதிநிதிகளாகவும் இருப்பவர்கள் இதிலே அக்கறை கொண்டு, சிறந்த முறையிலே பிரசாரம் செய்யவேண்டும். அப்பொழுது தான் மக்கள்இதை நன்குணர்ந்து இவ்வாறு குற்றம் செய்யமாட்டார்கள். இம்மாதிரிக் குற்றம் செய்யாமல் அவர்களைத் தடுப்பதற்கான பொறுப்பை உத்தியோகப் பற்றில்லாத மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் இந்தச் சமயத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன்.

அவ்வாறு பிரசாரத்திலே ஈடுபட்டால் இந்தத் திட்டம்வெற்றிகரமாக நிறைவேறுவதற்குஉதவியாக இருக்கும். இதில் கட்சி வித்தியாசம் ஒன்றும் இல்லை. கட்சி வித்தியாசத்திற்கு வேறு இடம் இருக்கிறது. ஆனால், மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கட்சி வித்தியாசத்திற்கே இடம் இல்லை. இது போல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து செய்யக்கூடிய காரியங்கள் பல உண்டு. அதைச் செய்யக்கூடும் என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. ஆகவே, எல்லோரும் சேர்ந்து இந்த மதுவிலக்குத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு, அதிலும் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுதற்கு வேண்டிய ஆதரவை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

## அறவே அகற்ற

இன்னும் சிலர் ''இந்தச் சட்டத்திலே தண்டனை கொடுப்பது போதாது'' என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் ''தண்டனை அதிகம்'' என்றும் சொல்கிறார்கள். வேறு சிலர் ''உற்பத்தி செய்கின்றவர்களுக்கு (கள்ள மது தயாரிப்பவர்கள்) தண்டனையைக் குறைக்கலாம், குடிக்கின்றவர்களுக்கு தண்டனையை அதிகப்படுத்த வேண்டும்'' என்று சொன்னார்கள். ''உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிகமாகத் தண்டனை கொடுக்கலாம். ஆனால், குடிக்கின்றவர்களுக்குத் தக்க தண்டனையைக் குறைக்க வேண்டும்'' என்று கூடச் சிலர் சொன்னார்கள்.

இதை யெல்லாம் பார்த்து எந்த வகையிலே சட்டத்தை அமுல் நடத்தினால் இந்தக் குற்றங்களை அறவே அகற்ற முடியும் என்பதற்குச் சட்டசபை அங்கத்

திருச்சிற்றம்பலம்

தேன்என இனிக்குந்
திருவருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான்என நிற்குந்
தெய்வமே மூலே
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊன்என நின்ற
உணர்விலேன் எனினும்
உன்திருக் கோயில்வந் தடைந்தால்
ஏன்எனக் கேளா
திருந்தனை ஐயா
ஈதுநின் திருவருட் கியல்போ

வாட்டமிலா மாணிக்க
வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த
கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா
விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னிலிங்கு
நானடைதல் வியப்பன்றே.

—திருவருட்பா

தினர்கள், அரசாங்கம் எல்லோரும் சேர்ந்து, அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்ற வேண்டியிருக்கிறது.

பிரசாரம் எல்லாம் ஓர் அளவுக்குத்தான் பலனைக் கொடுக்கிறது. எவ்வளவுதான் பிரசாரம் இருந்தாலும் அதற்கு மேல் சட்டம் வேண்டியிருக்கிறது. அதிலும் இயற்றப்பட்ட சட்டத்தைச் சிறந்த முறையில் அமுல் செய்வதற்குஅப்போதைக்கப்போது சில திருத்தங்கள் வேண்டியிருக்கிறது. அந்த முறையில்தான் மதுவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

## மதுபான பெர்மிட்

மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் போது மதுபான பர்மிட் என்ற பெயரில் சிலருக்குக் குடிக்க வசதி அளிப்பது கொஞ்சம் கூடப்பொருத்தமில்லை என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்; யார் கேட்டாலும் அவர்களுக்குப் பெர்மிட் கொடுப்பது கிடையாது. வைத்தியர்கள் பார்த்து அவர்கள் உடல் நிலை காரணமாக, அவர்களுக்குப் ''பெர்மிட்'' கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்தால், அந்தச் சிபார்சின் மீதுதான் மதுபானப் பர்மிட் வழங்கப்படுகிறது. அப்படி வழங்குவதிலே மாதத்திற்கு ஒரு யூனிட் முதற்கொண்டு நான்கு யூனிட் வரையிலே வழங்கப்படுகிறது. இதையும் தவிர்ப்பது என்றால் அதற்கு அரசியல் அமைப்புச் சட்டமே இடம் கொடுக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வைத்தியம் காரணமாக மது ஓரளவு வேண்டியிருந்தால் அதை நாம் தவிர்ப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.



சில பெரிய மனிதர்கள் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளால், அவர்களுக்கு இருக்கின்ற சூழ்நிலைகளால், குடிக்கின்றார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. என்னுடைய கவலையெல்லாம் ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். அதற்காகப் பெரிய மனிதர்கள் குடிக்கலாம் என்று சொல்லவில்லை. அதற்காக அவர்களுக்குச் சலுகை உண்டு என்றும் சொல்லவில்லை.

## வைத்தியப் பரீட்சை

வைத்தியப் பரீட்சையின் பேரில், வைத்திய அதிகாரியின் அத்தாட்சியின்பேரில் ஒருவருக்கு மது, மருந்து என்ற முறையில் வேண்டியிருக்கிறது என்றுசொன்

ணல் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. இது எல்லோருக்கும், பெரியமனிதர்களாய் இருந்தாலும் சரி, சிறிய மனிதர்களாய் இருந்தாலும் சரி எல்லோருக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இதனுல் பெரிய மனிதர்களுக்கு, குடிப்பதற்குச் சலுகை கொடுக்கிறேம் என்று சொல்லுவது சரியல்ல.

மதுபான பர்மிட் வழங்குவதில் ஒரு டாக்டர் பரிசீலனே செய்வதற்குப் பதிலாக ஒரு போர்டு வைத்து, அவர்களைச் சிபார்சு செய்யச் சொல்வது என்றல், அது இன்னும் கொஞ்சம் திருப்திகரமாக இருக்கும் என்ற வகையிலும் சிலர் சொன்னுர்கள். ஆனுல், பொதுவாக அவர்களும் கருதவில்லை என்று நினைக்கிறேன். நானும் நினைக்கவில்லை—அந்த வகையிலே சொல்லுவது சரியல்ல. டாக்டர்களை நம்ப முடியாது என்று சொல்லுவதற்கில்லை. டாக்டர்களை நம்பித்தான் நாம் நம் உடலை அவர்களிடம் ஒப்புவிக்கின்றேம். கூடியவரை அவர்களும் அவசியத்தை உணர்ந்துதான், அவர்களுடைய பெரும் பொறுப்பை உணர்ந்து தான், இம்மாதிரி சர்டிபிகேட்டுகளை ஜாக்கிரதையாக வழங்குகிருர்கள் என்று நாம் எதிர்பார்க்கிறேம். ஆனுல் குறிப்பிட்ட சில விஷயங்களிலே இந்தச் சர்டிபிகேட் போதவில்லை. திருப்திகரமாக இல்லையென்று ஏற்பட்டால் அப்போதைக்கப்போது ஒரு போர்டு நியமித்து ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர்களை வைத்தும் பரிசீலனை செய்யச் சொல்லுகின்றேம்.

## மிகைப்படுத்தப்பட்ட தோற்றம்

ஏராளமான பேர் திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதாகவும், எல்லோரும் குடிக்கிருர்கள் என்றும், குடிக்காதவர்களே இல்லை என்றும் பேசுகிருர்கள்.

பொதுவாக நமக்கு எல்லாம், ஒரு தீமையைப் பார்த்தாலேயே, உலகம் பூராவும் அந்தத் தீமை மலிந்து கிடப்பதாகத் தோன்றுவது இயற்கை. எங்கோ ஓர் இடத்தில் கொலை நடந்து விட்டது. மறுநாள் பத்திரிகையில் அது கொட்டை எழுத்தில் வந்திருக்கும். அதைப் பார்க்கும் போது உலகமே கொலை மயமாக இருப்பது போன்ற தோற்றம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அதேபோல், எங்கோ ஒருவர் இருவர் குடிப்பதைப் பார்த்து விட்டு இந்த ராஜ்யம் பூராவும் எல்லோரும் குடிக்கிருர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிருர்கள் என்கிற தோற்றத்தைக்கொண்டு பேசுகிறேம். இது சரியல்ல.

மொத்த ஜனத்தொகையில் மதுவிலக்குக் குற்றம் புரிபவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. என்னுடைய மதிப்பின் படி நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மேல் இன்றைய தினம் குடிப் பேயிலிருந்து காப்பாற்றப் பட்டிருக்கிருர்கள் என்று சொல்வேன். ஆகவே குற்றங்களை மிகைப்படுத்திச் சொல்ல வேண்டியதில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.


## ஒரே நோக்கம்

மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்தவேண்டு

மென்று சொல்கிருர்கள். இது தான் அரசாங்கத்தின் எண்ணமும். மதுவிலக்குக் கமிட்டி ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் தாலுக்காக்களிலும், கிராமங்களிலும் கூட அமைத்துக் கொள்ளலாம். தடை ஒன்றும் இல்லே. இந்தக் கமிட்டிகளில் எல்லாக் கட்சிகளும் இடம்பெற வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆவல். எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்கிற முறையில் எல்லாக் கட்சிக்காரர்களும் இடம் பெற வேண்டும் என்பதுதான் சர்க்கார் எண்ணம்.

ஏழை மக்களேப் பாதுகாக்க வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காகத்தான் சர்க்கார் இந்தத் திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்ற முயற்சி செய்கிருர்கள்.

★




### திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉனைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே.

கொள்ளேன் புரந்தரன்மால் அயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே.

—திருவாசகம்

# சான்றோரின் சிறப்பு



திருமுருக

கிருபானந்தவாரியார்

### மேன்மக்கள்

மேன் மக்கள் எப்போதும் தமது நிலையினின்றும் மாற மாட்டார்கள்; தமக்கென்று உரிய கொள்கையில் உறுதியுடன் நிற்பர். தமக்குப் பிறர் அழிவு தேடினாலும் உத்தம குணத்துடன் விளங்குவார்கள்.

### பெரியோர் தன்மை

கானகத்திலேயுள்ள வேல், ஆல், அரசு, புளி, புங்கு, கள்ளி முதலிய மரங்கள் வெட்டியவுடன் விறகு என்று பேர் பெறுகின்றன. நின்றால் மரம், கொன்றால் விறகு. அவற்றை விற்கின்ற இடம் விறகுக் கடை எனப் பேர் பெறும்.

தேக்கு, சந்தனம் முதலிய ஜாதி மரங்கள் வெட்டப்பட்டாலும் சிறு துண்டுகளாக்கினாலும் மரம் என்றே பேர் பெறும். அவற்றை விற்கின்ற இடம், மரக்கடை எனப்படும். நாற்காலி முதலியனவாகச் செய்து வைத்திருந்தாலும் மரம் என்றே கூறுவர்.

அதுபோல் பெரியவர் எத்தனைச் சிறுமைவரினும் தமது நிலையினின்றும் மாறமாட்டார்கள்.

இனி, தமக்கு உதவிபுரியாதவர்களிடத்திலும் கருணை காட்டுவர் மேன்மக்கள்.

### கீழ்மக்கள்

கீழ்மக்கள் பலகாலும் உதவி புரிந்தோரையும் அலட்சியம் புரிவார்கள், நன்றி பாராட்டுகின்ற தன்மை கீழோரிடம் இராது.

இந்த உயர்ந்த கருத்துக்களை ஒரு புலவர் ஒரு நிகழ்ச்சியிலேயே வைத்துக் கூறுகின்றார்.

### கற்புக்கரசி

உத்தமமான கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்தார்கள். மனைவி நாள்தோறும் கணவனுக்கு இனிய உணவு படைப்பாள்; விசுறுவாள்; இன்னுரை கூறுவாள். இரவில் படுக்கை விரித்துக் கணவரைப் படுக்க வைப்பாள். பய பக்தி விசுவாசத்துடன் கால்களை வருடுவாள். இவ்வாறு நாள்தோறும், கற்புக்கரசியாகிய அக்காரிகை ஒழுகி, நாயகனுக்கு நலம் புரிந்து வந்தாள்.

## அன்புக் கணவன்

பொருளீட்டுதற் பொருட்டு நாயகன் தன் மனைவியிடம் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டான். அன்புள்ள கணவன் அம் மாதரசியை விட்டுப் பிரிய மனம் இன்றி, உள்ளம் உலைந்து, இன்றியமையாத கருமத்தின் பொருட்டே புறப்பட்டான்.

அப்பெண்மணி உடம்பை விட்டு உயிர்போவது போல் தன் கணவனுர் போவதைக் குறித்துப் பெரிதும் வருந்தினுள். கண்ணீர்த் துளி சிந்த உள்ளம் உருகி நின்ருள். கணவனுரின் திரு மேனியையே உற்று நோக்கிய வண்ணம் நின்ருள்.

செல்லுகின்ற கணவன் அடிக்கடி மனைவியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்ருன்.

அந்த உத்தமி கூறுகிருள்:

''நான் நாள்தோறும் அன்புரை கூறி, என் மெல்லிய கரங்களால் வருடப்பெற்ற கால்கள் என்னைவிட்டுப் பிரிந்து செல்கின்றன. என்ஞல் ஓர் உதவியும் பெருத கண்கள் திரும்பித் திரும்பிப் பார்க்கின்றன!

''கண்கள் மேலானவை; கால்கள் கீழானவை; மேலான கண்கள் இரங்குகின்றன; கீழான கால்கள் என்னை விரோதிக்கின்றன''

இந்தக் கருத்தையே வைத்து ஓர் இனிய பாடலாகப் பாடுகின்ருள். அந்த அரிய பாடல் இதோ வருகிறது:

''மாலோதி நித்தம் தமியேன்
வருந்தி வருடப் பெற்ற
காலோ நடந்தன; கண்ணே
திரும்பின; கற்றவர்க்குப்
பூலோகமுந் தரும் மாவலி
வாணன் பொருப்பிடத்தே
மேலோர் இரங்குவர்; கீழோர்
எந்நாளும் விரோதிப்பரே.''

ஆதலால் மேலோர் என்றும் உதவி புரிவார். கீழோர் உதவி பெற்றவரையும் வெறுத்து விரோதம் புரிவர். மேலேயுள்ள தமிழ்க்கவி, மேலோரது தன்மையையும் கீழோரது தன்மையையும் நன்கு விளங்குகின்றது.

## நல்லோர்

(நல்லோர்கள், தமக்குப் புல்லர்கள் தீங்கு செய்யினும் அவர்மீது சினங் கொள்ளார். அவர்களது அறியாமையைக் கண்டிரங்குவர். முனிவிலும் நல்லோர் அருள்புரிவர்; இன்னு செய்தார்க்கும் இனியவே செய்வர். இவ்வினிய கருத்தை இராமாயணத்தில் விபீடணனுக்கு அடைக்கலம் தரும் இடத்தில் இராமர் வாக்கில் வைத்துக் கூறுகின்ருர் கம்பர்.)

நிலத்தினும் கடல் மூன்றுமடங்கு பெரிது. கடலுக்கு இடையே உலகம் அழியாமல் இருப்பதற்குக் காரணம் நல்லோர்கள் வாழ்வதேயாகும்.

மழை பொழிவதும் நல்லோர் பொருட்டெென உணர்க. 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்

யும் மழை' என்று ஔவை பிராட்டியார் அருளிச் செய்கின்றார்.

நல்லோர்கள், புல்லர்கள் தீங்கு புரியினும் அவர்மீது சினங்கொள்ளார். அறியாமையால் இவர்கள் இங்ஙனம் புரிகின்றனர் என்று கருதிப் புல்லர்களது அறியாமைக்குப் பெரிதும் இரங்குவர். அந்தோ! இவர்கள் புல்லறிவு நீங்கி நல்லறிவு பெறட்டும் என்று அவர் பொருட்டு இறைவனை வேண்டுவர் நல்லோர்.

## முனிவிலும் அருள்வர்

இனி முனிவிலும் நல்லோர் அருள்புரிவர். புல்லர்கள் உள்ளங் கனிந்து மகிழ்ச்சியுற்றாலும் ஒரு சிறிதும் உதவி புரிய மாட்டார்கள்.

வாழை, காயாக இருப்பினும் வெட்டினவர்க்குப் பயன்படும். பழுத்தால்தான் பயன்படும் என்பது வாழைக்கில்லை. பூவும் பிஞ்சும் காயும் கனியும் இலையும் தண்டும் மட்டையும் எல்லாமே மக்களுக்குப் பயன்படுகின்றன.

எட்டி மரம் பழுத்தாலும் மக்களுக்குப் பயன்படுவதில்லை. இதனைச் சிவப்பிரகாச அடிகளார் கூறுகின்றார்.

முனிவிலும் நல்குவர்
மூதறிஞர் உள்ளக்
கனிவிலும் நல்கார்
கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும்
கதலிதான் எட்டிபழுத்
தாயினும்
ஆமோ அறை.

## வழுவிலார்

நல்லோர்கள் எத்துணைத் துன்பமுறினும் அறநெறியினின்றும் வழுவார். செய்யத் தகாதவற்றைச் செய்யார். சொல்லத் தகாதன சொல்லார். நினைக்க ஒண்ணாதவற்றை நினையார். புலி பெரும் பசியுற்றாலும் புல்லைத் தின்னாதல்லவா? இதுதான் நல்லோர்களின் பெருந்தன்மை. நல்லார் நல்லவற்றினின்றும் ஒரு போதும் வழுவார்.

நல்லாற் றொழுக்கின்
தலை நின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்
கொருப்படார்- பல்பொறிய
செங்கட் புலியேற்றப்
பசித்தும் தின்னாவாம்
பைங்கட் புனத்த
பைங்கூழ்.

இனி நல்லோர்கள் எத்துணைத் துன்பம் நேரினும் தங்களது தகுதியினின்றும் குறைவுபடார். சந்தனம் அரைத்தாலும் மணக்கும்; அகில் புகைத்தாலும் கமழும்; சங்கு சுட்டாலும் வெண்மையாகவே யிருக்கும்.

''கெட்டாலும் மேன் மக்கள்
மேன் மக்களே
சங்கு சுட்டாலும்
வெண்மை தரும்.''

என்கிறார் ஔவையார்.

மேலும், நல்லோர் தமக்குத் தீங்கு இழைத்தோர்க்கும் நன்மையே புரிவர்.

இதுதான் மேன் மக்களின் சிறந்த இயல்பு.

"இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

என்பது திருவள்ளுவரது திரு மொழி.

## பாண்டவரின் தவநெறி

ஒரு சமயம் பாண்டவர்கள் வனத்தில் வசித்துக்கொண்டிருந் தார்கள். இன்பத்தின் சிகரத்தில் இருந்த அவர்கள் துன்பத்தின் சிகரத்தில் நின்றார்கள். காற்று, மழை, வெயில், பனி, பசி, தாகம் முதலிய துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, தங்களது மனநிலை பிறழாதும் தவநெறி தவறாதும் வாழ்ந்தார்கள்.

இவர்களை ஆடைகளாலும் அணிகலன்களாலும் பிற உயர்வு களாலும் அவமானம் புரியக் கருதினார்கள் துரியோதனாதிகள். பசுக்களை விலங்குகள் கொல்லுவ தாகவும், அப்பசுக்களைக் காப் பாற்றப் போவதாகவும் திருத ராஷ்டிரனிடம் கூறி விடை பெற்றுத் துரியோதனாதிகள் புறப் பட்டார்கள். 'நெய்கிறவனுக்குக் குரங்குக் குட்டி எதற்கு' என் பது ஒரு பழமொழி. அதுபோல வேட்டையாடுகின்ற இவர்கள் மனைவியரை அழைத்துப்போவது எதற்கு? அவர்கள் நோக்கம், பாண்டவர்களை அவமானம் புரி வதுவேயாகும்.

## துரியோதனக் கும்பல்

ஆதலால் துரியோதனன், துச் சாதனன், கர்ணன், சகுனி முத லிய கொடியவர்கள் தங்கள் மனைவிகளை விலையுயர்ந்த ஆடை களாலும் அணிகலன்களாலும் அலங்கரிக்கச் செய்து, நறுமணம் பூசி, நன்மலர் முடித்துத் தேவ குமாரிகளுடன் தேவ குமாரர் கள் வந்தது போல்வந்து பாண்ட வர்கள் முன் பற்றி உலாவினார் கள். தருமர் முதலியோரும், திரௌபதியும் அவர்களைக் கண் டும் காணாதவர்களைப்போல் இருந்து தங்கள் தவநெறியில் நின்றார்கள். எவ்விதமான மாறு பாட்டையும் அடையவில்லை. அவர்களுடைய ஏற்றத்தையும் தோற்றத்தையும் கண்டு பொறா மையோ கோபமோ வருத்தமோ அடையவில்லை.

## சித்திரசேனன்

குபேரனுடைய சேனைத் தலை வன் சித்திரசேனன் என்பான் அங்குவர அவனுடன் துரியோத னாதிகள் எதிர்த்தார்கள். சித்திர சேனன் துரியோதனன் முதலி யோர்களை வென்று ஆண்களையும் பெண்களையும் இருவர் இருவராக எப்படி எப்படி அமைந்ததோ அந்த வண்ணம் பிணைத்து ஆடு மாடுகளை ஓட்டுவது போல் ஓட்டிக்கொண்டு சென்றனன்.

## தருமர் சபதம்

இதனையறிந்த தருமர் பெரிதும் மனம் வருந்தினார். கண்ணீர் சிந்தினார். துரியோதனன் முதலி யோர் சிறை மீளும் வரை தண் ணீரும் அருந்தமாட்டேன் என்று சபதம் செய்துகொண்டார்.

துரியோதனாதியரைச் சித்திர சேனனிடமிருந்து சிறைமீட்டு வருமாறு வீமனையும் அருச்சுனனையும் அனுப்பியருளினார்.

வீமார்ச்சுனர் சென்று சித்திர சேனனை வென்று துரியோதனாதியரை மீட்டு வந்தனர்.

தம்மை அவமதிக்க வந்த மிகக் கொடியவர்களாகிய துரியோதனன் முதலியோரைத் தருமர் வரவேற்று இன்னுரை பகர்ந்தார்; அறிவுரை கூறினார். சிதைந்த ஆடைகளை அகற்றுமாறு செய்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும், முன் குபேரன் தமக்களித்த விலைமதிக்க முடியாத ஆடையாபரணங்களை வழங்கினார். இனிது உபசரித்து ஊருக்கு அனுப்பி வைத்தார்.

தங்களை அவமானம் புரியவந்த துரியோதனாதியரைச் சித்திர சேனனிடமிருந்து சிறை மீட்டு ஆடையும் அணிகலன்களும் வழங்கி நல்லுரை நவின்று உபசரித்தார் தருமர்.

ஆகவே நல்லோர் தமக்கு இடர் விளைவிப்பார்க்கும் இனிமையே புரிவர்.

❊

# பன்றி உருப்பெற்ற பரமன்

கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் பி.ஏ.

"பகவான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தும் காத்தும், அதைப் புதிதாய்ப் படைப்பதற்காக அழித்தும் வருகிறார். இந்த வேலைகளில் அவருக்கு ஓய்ச்சல் ஒழிவே கிடையாது. அலுப்பு சலிப்போ, அசதியோ அசிரத்தையோ கிடையாது. பிரம்மன் முதல் 'ஸ்தம்பம்' என்ற மிக மிகச் சிறிய பூச்சிவரையில் எல்லாவற்றையும் படைக்கின்றார். எல்லோருக்கும் படியளக்கிறார். அவைகளை அழித்தும் புதிதாகப் படைக்கிறார். உலகத்திற்கு நாசம் ஏற்படும் காலத்தில் அவர் உடனே வந்து அதை நிவர்த்தி செய்கிறார். அவருக்கு இதெல்லாம் எப்படி முடிகிறது? அவர் எல்லாம் வல்லவர். எல்லாம் அறிந்தவர். எங்கும் உள்ளவர்.

ஒரு சமயத்தில் பூமண்டலமும் சமுத்திரத்திற்குள் வெகு ஆழத்தில் அமுங்கி மூழ்கிப்போய் விட்டது. உலகத்தில் பயிர் பச்சைகள், பசு பக்ஷிகள், மனித வர்க்கம் ஒன்றும் வாழ முடியாமல் போய்விட்டன. அவைகளை மறுபடியும் படைப்பதற்குப் பூமி வேண்டியதாயிருந்தது. பகவான் உடனே ஒரு பன்றியுருவை எடுத்துக் கொண்டார். கடலுக்குள் புகுந்து தன் தந்தத்தினால் பூமியை நெம்பித் தூக்கி அதனுடைய பழைய நிலைக்குக் கொண்டு வந்தார். அப்போது இரண்யாக்ஷன் என்ற ராக்ஷஸன் மதோன்மத்தனாய் கண்டவர்களை யெல்லாம் ஜயித்துப் பெயரும் புகழும் அடைவதற்காகக் கடலுக்குள் குதித்து பகவானுடன் சண்டை போட்டான். "பூமி என்னுடையது அதைத் தொடாதே!" என்று இரண்யாக்ஷன் கர்ஜித்தான். பகவான் உடனே அவன் காதின் கீழ் ஒரு தட்டுத் தட்டி அவனை வதம் செய்து விட்டார்.

பகவான் பூமியைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்த படியால்தான் நாம் எல்லோரும் ஜீவித்திருக்கிறோம். இல்லாவிடில் பூமண்டலம் ஒரே சமுத்திரமாக இருக்கும். இப்பேர்ப்பட்ட உபகாரம் செய்தவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டாமா? அவருடைய பெருமையைப் பாடி நாம் மகிழ வேண்டும். அவருடைய கல்யாண குணங்களையும், வீரச் செயல்களையும் நாம் வாயாரச் சொல்ல வேண்டும். அவர் உலகத்திற்கு உபகாரம் செய்தது போல் நாமும் நம்மால் முடிந்த வரையில் பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டும். பணமுள்ளவர்கள் பணத்தைக் கொடுத்து உதவி செய்யலாம். வைத்தியராய் இருப்பவர் சிலருக்கு இலவச வைத்தியம் செய்யலாம். வக்கீலாக இருப்பவர் சிலருக்கு இலவசமாக வாதாடலாம். எழுதப் படிக்கத் தெரிந்தவர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். நிலபுலன் உள்ளவர்கள் ஏழைகளுக்கு அன்னம் போடலாம். ஒன்றுமில்லாதவர்கள் தங்கள் சரீரத்தினாலாவது உதவி செய்யலாம். அதுவும் முடியாதவர்கள் வாக்கினாலாவது உதவி செய்யலாம். இதுவே நாம் அவருக்கு நன்றி செலுத்தும் வழி!"

# எந்தச் சமயத்தினருக்கும் ஏற்ற வழி



கி. ரா.

திரு ஹம்ஃப்ரிஸ் என்ற ஆங்கிலேயருடைய வாழ்க்கை அனுபவத்தைப் போல் நூதனமான அனுபவத்தை வேறு எவரும் பெற்று இருப்பது சாத்தியம் இல்லை.

ஹம்ஃப்ரிஸ் என்ற ஆங்கிலேயருடைய உத்தியோகம் அரசாங்க போலீஸ் துறையில், உதவி சூப்ரிண்டெண்ட் என்ற துணை மாவட்ட போலீஸ் அதிகாரியாக வேலூருக்கு வந்த சில நாட்களில் ஹம்ஃப்ரிஸ் ரமணருடைய தரிசனத்தைப் பெற்று, பெரும் பயன் அடைந்து உள்ளார். ஹம்ஃப்ரிஸுக்கு ரமண மகரிஷியை அறிமுகம் செய்து வைத்தவர் காவிய கண்ட கணபதி சாஸ்திரியே ஆவர். சாஸ்திரி கூறி உள்ள தத்துவ நூலில் ஹம்ஃப்ரிஸின் சந்தேகங்களுக்கு ஏற்ற தெளிவான விடைகள் கூறப்பட்டுள்ள போதிலும், சாஸ்திரி அவரை பகவான் ரமணருடைய சன்னிதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு நிகழ்ந்தவற்றை ஹம்ஃப்ரிஸ் கூறியபடி இங்கு அப்படியே எடுத்து எழுதுவதே நலம்.

''என்னுடைய தெலுங்கு ஆசிரியரும், திரு சாஸ்திரியாரும் என்னை மலைமேல் உள்ள குகைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தக் குகையின் வெளி வாசலில் அவர் அமர்ந்து இருந்தார். நாங்கள் சென்று மௌனமாக அந்த தெய்விக மனிதருடைய முன்பாக அமர்ந்தோம். வெகு நேரம் அந்தத் திருவருள் நிறைந்த சன்னிதியில் மௌனம் நிலவியது. அவருடைய ஆழ்கடலைப்போன்ற சாந்தியைக் காட்டிய, இரு விழிகளையும் நோக்கிக் கொண்டு, நான் வீற்று இருந்தேன். அந்தத் திருவடிவமே ஆண்டவன் வசிக்கும் திருக் கோவிலாகத் தோன்றியது. சற்றும், அசையாமல் வீற்று இருந்த உருவமே தெய்வத் திருவருள் என்ற ஒளி வடிவமாய்க் காணப்பட்டது.

''இவ்வாறு நான் வாய் பேசாமல், ஆழ்கடலைப் போன்ற வடிவையே நோக்கி இருந்த சமயம் சாஸ்திரியார் என்னைப் பேசலாம் என்று பணித்தார். நான் தெளிவைப் பெறுவதற்காக வந்தேன் என்று கூறினேன். என்னுடைய தெளிவுக்காக மகரிஷி சிறு சொற்களைக் கொண்டு ஆங்கிலத்தில் பேசினர். அவருடைய திருவாய் மொழிகள் நிறைவைக் காட்டி, என்னுடைய எண்ணத்தில்மெய்ஞ்ஞான தீபத்தை ஏற்றி

வைத்தன. என்னுடைய கேள்வி களையும், மகரிஷிகளின் விடை களையும் என்னுடைய நண்பர் களுக்காக, ஆங்கில சஞ்சிகை ஒன்றில் வெளியிட்டுள்ளேன்... திரு ரமணருடைய உருவத்தை வர்ணித்து எழுத எனக்குச் சக்தி இல்லை. நற்பண்பே அவருடைய திருவடிவம். நிலையான சாந்தி உருவே மகரிஷி. தன்னடக்கம், எளிய சுபாவம், சத்தியத்தின் துணிவு, ஆகிய இவையே அந்தத் திரு உருவத்தை அலங்கரிக்கும் அணிகலன்கள்.''

இந்த விதம் ரமணருடைய நிறைவான நல்லாசியைப் பெற்றுள்ள திரு ஹம்ஃப்ரிஸ், பின்னர் ஓய்வு பெற்று, கத்தோலிக்கப் பாதிரியாராகித் தன்னுடைய வாழ்க்கையை நிலைபெற்றுவாழ்ந்துள்ளார்.

ஹம்ஃப்ரிஸைப் போலவே வேறு பல ஐரோப்பியர்களும் பகவானுடைய உபதேசத்தைக் கொண்டு நிலை பெற்றுள்ளனர். அந்த ஐரோப்பியர்களில் முக்கியமானவர் ஆர்தர் ஆஸ்பார்ண் என்ற செல்வராகும். இந்தச் செல்வர் தன்னுடைய அனுபவத்தை மிகத் தெளிவாக நூல் வடிவில் கூறி உள்ளதால், அந்நூலை எவரும் படித்துப் பயன் பெறலாம்.

ரமணருடைய குகை வாசத்தின் சமயம் எத்தனையோ அன்டர்கள் திரண்டுவந்து, அங்கேயே தங்கி, தினம் காலை மாலை, தரிசனம் செய்து வந்தனர். அந்த இடத்தில் இருள் நிறைந்து இருந்ததால், சில பேரன்பர்களுடைய துணையைக்கொண்டு, குகைக்கு தீப ஒளி கொண்டு வரப்பட்டது. பிறகு, அங்கு வருவோருடைய நலனை எண்ணிச் சாப்பாடு தயாரிக்க வேண்டியதாயிற்று. இந்த விதம் தொடங்கிய ''ரமணாசிரமம்'' வரவரப் பெரிய நிறுவனமாய் வளர்ந்துவிட்டது.

ரமணச் செல்வருடைய நிலையைப்பற்றி அறியாமல் பல அன்பர்கள் தங்களுடைய நல்லுணர்வைக்கொண்டு, நன்கொடை அனுப்பி வந்தனர். அந்த சமயம், செல்வருடைய இளைய சகோதரரும், தாயும் அங்கு வந்து தங்கி இருந்தனர். அந்த வாய்ப்பைக் கொண்டு சில நல்லன்பர்கள் இளையவருடைய மேற்பார்வையில் ஆசிரம நிர்வாகத்தைவிட்டு, வேண்டியவர்களுக்கு உணவு அளிக்கவும், வந்து தங்குவோருக்கு எல்லா வசதிகளைச் செய்யவும் வழி அமைத்து விட்டனர். இந்த வழியில் தன்னைச் சுற்றி ஒரு கிராமமே உருவாகி வருவதை நன்றாகஅறிந்து உள்ளதிரு. ரமணர் எவ்வாறு அந்தப் பெருங் குடும்பத்தை அனுமதித்தார்?

ரமணருடைய தாய் சில தடவைகள் அங்கு வந்து தன்னுடைய செல்வனைக் கண்டு இரண்டொரு நாட்கள் வேறு ஒரு நல்லன்பருடைய இல்லத்தில் தங்கிச் சென்றதுண்டு. அந்தச் சமயங்களில் செல்வர் தன்னுடைய தாயை மற்ற எவரையும் போலவே எண்ணி நடந்து வந்தாரேயன்றி, தாய் என்ற தனியான உணர்ச்சியைக் கொண்டு நடந்தது இல்லை. தாயின் நிலை அவ்விதம் இல்லை. ''தன்னுடைய செல்வனே ரமணர்'' என்ற பாசத்தைத் தள்ள வழியின்றியே நடந்து வந்தார். செல்வருடைய தரிசனத்துக்காக வரும் எண்ணற்ற பெண்களில் தன்னுடைய தாயும் ஒரு பெண் என்றே எண்ணிய செல்வர், தாயைக்கண்டு, எவ்வித உணர்ச்

சியையும் காட்டாமல் பழகி வந்தார். செல்வருடைய குகைவாசத்தின் சமயம் வந்து சில நாட்கள் தங்கிய தாய், பல தடவைகள் வந்து உடன் திரும்பிவிடுவது உண்டு. அப்படி வந்து தங்கிய ஒரு சமயத்தில், தாய் விஷஜுரத்தால் தாக்குண்டு, அங்கேயே பல நாட்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு அவசியம் ஏற்பட்டது. செல்வரும் தாயின் நோய் நன்ருய் குணமாகும்வரையில், உடன் இருந்து, கவனித்து வந்தார். அந்தச் சமயத்தில்தான் செல்வர் தாயின் நிலேயைக் கண்டு, கருணேயுடன் அருணுசலேசுவரரை எண்ணித் துதித்துப் பாடிஞர். அப்படிப் பாடி உள்ள துதிப்பாலே திரு. அருணுசலேசுவரரை வேண்டி தன்னுடைய தாயின் பிறவிப்பிணியை நீக்குமாறு கட்கும் இனிய தோத்திரமாகும்.

பின்னர் இரு முறை வந்து தங்கிய தாய் தன்னுடைய வயோதிக நிலேயை எண்ணி, தன்னுடைய செல்வனுடைய சன்னிதியிலே வந்து தங்கி ஆறு ஆண்டுகள் வாழ்ந்தார். அந்த ஆறு ஆண்டுகளிலும், தானே செல்வனேக் காணவரும் அன்பர்களுக்குத் தொண்டு செய்யும் திருப்பணியில் ஈடுபட்டு வாழ்ந்து, செல்வருடைய திருவருளேக் கொண்டு, நிறைவைப் பெற்று, நற்பண்புச்செல்வத்தைக் கொண்டு, தன்னுடைய எண்ணத்தில் தெளிவைப் பெற்று, தன்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

ரமணத் திருவருள் செல்வர், தாயின் நிலேயைக் கொண்டு, தக்க மரியாதைகளுடன் அடக்கம் செய்து, அந்த இடத்தில் ஒரு சிவாலயத்தையும் கட்டுவித்தார்· இன்று அந்தப் புனிதத்தலமே, ''ரமணுசிரமம்''; என்ற தெய்விகப் பெருங்கோவிலாய் விளங்குகிறது.

ரமணருடைய நிலேயே மெய்ஞான நிலே என்ற நித்ய நிலே. தெய்விக வாழ்க்கை வாழ்ந்துள்ள நம் நாட்டு ரிஷிகள் எவரும் இந்த விதமான தனி வாழ்க்கையில் ஈடுபட்டு, திருவருளேப் பெற்று வாழ்ந்தது இல்லே. இந்த வழியைப்போல் கஷ்டமான வழி வேறு இல்லே. ஏனென்ருல் நம்முடைய உணர்ச்சிகளேக் கொண்டு வாழ்ந்து வரும் சமயம் அந்த உணர்ச்சிகளின் வேகத்தைக் கடந்து சென்ருல்தான் வாழ்க்கையை வாழ்ந்து, நிறைவைப் பெற்று, நித்தியான மெய்ஞானத்தைப் பெற்று, விளங்க முடியும். அப்படி இன்றி உணர்ச்சிகளே அடக்கி, சிலகாலம் வாழ்ந்தாலும், பின்னர் அந்த உணர்ச்சிகள் பன்மடங்கு வேகத்தைப் பெற்று, நம்முடைய எண்ணத்தில் நிலே பெற்றுள்ள சாந்தியைக் குலேத்துவிடும் அளவுக்கு வந்து தாக்கும் என்று கூறுவது சரியாகும். அந்தக் காரணத்தைக்கொண்டே நம்முடைய காலத்தில், சில மேல் நாட்டு உளவியல் தத்துவ ஞானிகள், ஆசையை அடக்குவதால் வரும் மனநோய்களேப்பற்றி பக்கம் பக்கமாக விவரித்து ஏராமான நூல்கள் எழுதி உள்ளனர்!

ஆனல், ஆசையை அடக்குவது கூடாது என்ருல், எண்ணத்தில் தோன்றும் ஆசைகளே எல்லாம் நிறைவேற்றுவது சாத்தியமா?

அப்படி நிறைவேற்றுவதால் ஆசைகள் அடங்கிவிட வழி இல்லே என்று முன்னரே கூறி உள்ளேன். அப்படியானல், ஆசை

கள் எல்லாவற்றையும் ஏற்று வாழ்வது சரியில்லை; அடக்குவதாலும் பயன் இல்லை என்று கூறினால், என்னதான் செய்வது?

இந்த இடத்தில், நம்முடைய அழியாப் பரம்பரைச் செல்வமான வேதங்களில் கூறப்பட்டுள்ள ஒரு தெளிவுரையைக் கொண்டு நாம் தெளிவு பெற்று வாழ வழி உண்டு; அந்தத் தெளிவுரை வருமாறு:—

''நரர்களுடைய எண்ண நிலையே அவர்களுடைய விடுதலையைப் பெறுவதற்குத் துணை செய்யும் சாதனமாகும்; அவர்களுடைய எண்ண நிலையே, விடுதலை பெறும் வழி இன்றி, நரர்களைக் கட்டி வைக்கும் பெரும் விலங்காகும்.''

எப்படி என்று காண்போம்.

எண்ண நிலையைக் கொண்டு தான் நாம் வாழ்க்கையை வாழ்கிறோம். எண்ணத்தில் மேலும் உணர்ச்சிகளைக் கொண்டுவாழும் சமயம், அந்த உணர்ச்சிகளில் கோபம், வெறுப்பு, அசூயை ஆகிய உணர்ச்சிகளைக் கொண்டு வாழாமல் தயை அன்பு ஆகிய உணர்ச்சிகளைக் கொண்டு வாழ்ந்தால் எண்ணத்தில் நிலையான சாந்தியைப் பெற்று, வாழலாம். அப்படி சாந்தமே வடிவான எண்ணத்தில் தெளிவு உண்டாவது இயல்பு. தெளிவைக் கொண்டு, நம்முடைய நிலையை எண்ணி, வாழ்க்கையை வாழ்ந்து வரும் சமயம், நிச்சயமான சில நற்பண்புகளைப் பெற்று வாழ்வது சுலபம். இந்த வழியில் சில தத்துவங்களைக் கண்டு வாழ்ந்து வந்தால், நம்முடையவாழ்க்கை நாடகத்தின் இறுதி லட்சியத்தைப் பெற்று, ஜென்ம சாபல்லியம் என்ற விடுதலையைப் பெற்று விளங்கலாம். இந்த வழியையே நாம் மேலே கூறியுள்ள வேத வாக்கியம் சுருக்கமாக ஒரே வாக்கியத்தில் கூறுகிறது. இந்த வழியில் வாழ்ந்து நிலைபெற்று விளங்கிய நம்முடைய ரிஷிகள் கூறி உள்ள வேத தத்துவங்களைக் கொண்டு வாழ்ந்து உள்ள பெருந் தெய்விகச் செல்வரே திரு. ரமணச் செல்வர். அவர் வாழ்ந்து காட்டி உள்ள வாழ்க்கையை நாம் கற்றுப் பயன் பெற வேண்டும்.''

இறைவன் வெளியில் வெகுதூரத்தில் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானமே நிறைந்திருக்கிறது. இறைவனைத் தன் உள்ளத்திலே நேராகக் காண்பவனே ஞானியாவான்.

—பகவான் ராமகிருஷ்ணர்



# காந்திஜி உண்மையின் உன்னத உறைவிடம்

டாக்டர் மு. அறம்

நெறியாளர், அமைதி நிலையம், கொகிமா—நாகாலாந்து

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா, இந்தியாவிலும், உலகமெங்கும் கொண்டாடப் பெறுகிறது. உலகத்தின் பல்வேறு நாடுகளும் காந்தி நூற்றாண்டு விழாவைச் சிறப்புற நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம் (Unesco)வேண்டியுள்ளது. காந்தி அடிகளை உலகம் போற்றுவதின் காரணம் என்ன?

காந்தி அடிகள் பல்வேறு பண்புகளை உடைய ஓர் அரிய மனிதர். அவர் தலை சிறந்த அரசியல் தலைவர்; ஓர் ஆண்மிகத் தலைவரும் கூட. கல்வித்துறையில் முன்னோடியாகவும் விளங்கினார். இணையற்ற சமூக சீர்திருத்தவாதி — அரசியல், பொருளாதாரத் துறைகளில் புதிய திட்டங்களை வகுத்துத் தந்தவர். அவர் மனித இனத்தின் நண்பர், ஞானி, வழி காட்டி.

ஆனால் அடிப்படையில் காந்தி அடிகள் ஓர் ஆன்மிகவாதி, சமயத் தலைவர். அவர் அன்றாட அரசியல் தொடர்பு உள்ளவராக இருந்தபோதிலும் அதற்கும் மேற்பட்டவராக, அதனையும் கடந்தவராக இருந்தார். பண்டித நேரு கூறியதுபோன்று அவருடைய இறுதிக் காலத்தில் ஆன்மிக உருவமாகவே விளங்கினார்.

காந்தி அடிகளுக்கு உண்மையே உரிய வாழ்க்கை நெறியாக விளங்கியது. தன்னுடைய வாழ்க்கை வரலாற்றிற்கு 'சத்திய சோதனை' என்று பெயர் சூட்டினார். இத் தலைப்பே தனிச் சிறப்பு வாய்ந்தது. ''எனது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது இதன் நோக்கமல்ல—சத்திய நெறியில் ஒழுகியபொழுது

எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறுவதே இதன் நோக்கம்'' என்று அவர் கூறியுள்ளார்.

குழந்தைப் பருவத்திலிருந்தே காந்தி அடிகளுக்குச் சத்திய நெறியில் நாட்டம் மிகுந்திருந்தது. மாணவப் பருவத்தில் தன் ஆசிரியரையும்விட உண்மையில் ஆர்வமுடையவராக விளங்கினார். கல்வித் துணை ஆய்வாளர் வந்திருந்த பொழுது ''பக்கத்திலிருந்த பையனைப் பார்த்தாவது எழுதுமாறு'' ஆசிரியர் கூறியதை மதியாது பிழையுடன் எழுதிக் காட்டினார். அடுத்து லண்டன் மெட்ரிகுலேஷன் தேர்வின் போது ''தங்கத்தையும்விட எது உயர்ந்தது என்ற கேள்விக்கு ''தங்கத்தையும்விட உண்மையே உயர்ந்தது'' என்று பதிலளித்தார்—இளமை பருவத்தில் அவர் கண்ட 'அரிச்சந்திரன்' நாடகமும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. ''அந்நாடகத்தை எவ்வளவு முறை பார்த்தும் சலிப்பே ஏற்படவில்லை. உண்மைக்காக அரிச்சந்திரன் ஏற்றுக்கொண்ட இடையறாத இன்னல்கள் என் உள்ளத்தில் ஆழப்பதிந்தன. அதைப் பின்பற்ற வேண்டுமென்ற உறுதியான எண்ணம் ஏற்பட்டது'' என்று சத்திய சோதனையில் எழுதியுள்ளார்.

காந்தி அடிகள் தனது எல்லா முயற்சிகளிலும் சத்தியத்தை முழுமையாகக் காண அயராது உழைத்தார். ''சத்திய நாட்டமே எனது வாழ்வின் குறிக்கோளாக அமைந்தது. அது படிப்படியாகப் பல்கிப் பெருகியது'' எனக் கூறியுள்ளார்.

காந்தி அடிகளுக்குச் சத்தியமே கடவுள், கடவுளுக்கு எத்தனையோ பெயர்கள் உண்டு. ஆனால் அவருக்குச் சத்தியம் என்ற பெயரே மிக மிகவும் ஏற்றது எனக் கூறியுள்ளார். தொடக்க காலத்தில் 'கடவுளே சத்தியம்' எனக் கூறி வந்தார். ஆனால் இறுதிக் காலத்தில் 'சத்தியமே கடவுள்' எனக் கூறத் தொடங்கினார். ''இந்த வேறுபாட்டை நீங்கள் உணரமுடியும். இடையறாத எனது சத்திய சோதனைகளுக்குப்பின் இந்த முடிவுக்கு வந்தேன்'' எனக் கூறுகின்றார்.

காந்தி அடிகள் சத்தியத்தை விஞ்ஞான ரீதியாக அணுகினார். ஒரு விஞ்ஞானியைப் போன்று சத்தியத்தைப்பற்றிப் பல பரிசோதனைகள் நிகழ்த்தினார். தனது சோதனைகளில் முழுமை கண்டுவிட்டதாக அவர் கூறவில்லை. ''ஒரு விஞ்ஞானி ஒரு சோதனையை நுட்பமாகவும், முன் யோசனையுடனும் ஆழ்ந்து நடத்தி வெற்றிகண்ட போதிலும், அதுவே முடிவானது என்று கூறுவதில்லை — அதைப் பற்றி ஒரு திறந்த மனத்துடன் இருக்கிறார். நானும் சத்திய நெறியைப்பற்றி அதே முறையைப் பின்பற்றுகின்றேன்'' எனக் கூறுகின்றார்.

வாழ்வு எல்லாக் கூறுகளையும் கொண்ட பகுக்க முடியாத ஒன்று எனக் காந்தி அடிகள் நம்பினார். ஆதலாத தனது சத்திய சோதனையை எல்லாத் துறைகளிலும் நடத்தினார் சிலர் ஆன்மீகத்தையும், அரசியலையும் கலப்பதாக அவரைக் குறைகூறினர். ''எனது சத்திய நாட்டமே என்னை அரசியலுக்கு இழுத்து வந்துள்ளது. நான் எந்தவிதத் தயக்கமும் இன்றித்

தன்னடக்கத்துடன் கூற விரும்புகின்றேன், ஆன்மிகத்திற்கு அரசியலில் இடமில்லை என்று கூறுபவர்கள், ஆன்மிகம் இன்னதென்றே அறியாதவர்கள்'' என்று மறுமொழி கூறினார்.

காந்தி அடிகள் சத்தியத்தைத் தன் அகவாழ்விலும், புறவாழ்விலும் அலசி ஆராய்ந்தார். தன்னைத் தானே துருவி உளவியல் ரீதியாக ஆராய்ந்தார். தென் ஆப்பிரிக்காவில் 'சத்தியாக்கிரகம்' என்ற புதிய நெறியைக் கண்டார். அதன் பொருள், ''சத்தியத்தில் உறுதியுடன் நிற்றல்'' என்பதாகும். சமுதாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அது ஒரு புதுமையான ஆக்கரீதியான வழியாகும்.

சத்திய நெறியில் முதிர்ச்சி அடைந்த காந்தி அடிகள் சத்தியத்தை அடைவதற்கான ஒரே வழி அகிம்சை என்பதனைக் கண்டறிந்தார். அகிம்சை என்பது அன்பின் வழிப்பட்டது. சத்தியத்திற்கும் அகிம்சைக்கும் உள்ள தொடர்பை அவர் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்தார். சத்தியத்தில் உறுதியுடையவராக இருந்ததைப் போலவே அகிம்சையிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். சத்தியமும், அகிம்சையும் அவருக்கு இரு கண்ணெனக் காட்சி அளித்தன. ''சத்தியத்தையும், அகிம்சையையும் தவிர உலகத்திற்கு நான் அளிக்கும் செய்தி வேறு இல்லை. அவைகள் மலைகளைப் போன்று பழமையானவை'' எனக் கூறுகின்றார். சத்தியத்தின் வாயிலாகக் கடவுளை அறிந்த காந்தியடிகள் மனிதருள் தேவனாக விளங்கினார். மகாகவி தாகூர் ''மேற்கோள்களைப் புத்தகங்களிலிருந்து காட்டுபவர் அல்லர்—நடமாடும் உண்மையின் உருவம்'' எனப் புகழ்மாலை சூட்டுகின்றார்.

அவருடைய சுடர்விடும் ஆன்மிக ஒளியைக் கண்ட பண்டித நேரு ''எங்கெல்லாம் அவர் அமர்ந்தாரோ, அவை புனிதமான கோயில்கள்'' என்று கூறுகின்றார்.

உலகப்பெரு விஞ்ஞானியாகிய ஆல்பர்ட் ஐன்ஸ்டின்ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தொலைவிடங்களிலிருந்து காந்தி அடிகளைக் கண்டார். ஆனால் அவரே வியப்புடன் ''இத்தகைய உயரிய மனிதர் தசையுடைனும், ரத்தத்துடனும் இம் மண்ணுலகில் நடமாடினார் என்பதை வருங்காலத் தலைமுறையினர் நம்புவதே கடினம்'' எனக் கூறுகின்றார்.

காந்தி அடிகள் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் தேதி மறைந்தபொழுது ''ஒளி மறைந்துவிட்டது'' என நேரு கதறினார். அவரே தொடர்ந்து ''நான் கூறியது தவறு—இந்நாட்டில் ஒளியூட்டிய விளக்கு சாதாரணவிளக்கன்று. அது ஆயிரக் கணக்கான ஆண்டுகள் இந்நாட்டில் ஒளிவீசிக் கொண்டே இருக்கும். அதனை வருங்கால உலகம் காணும். ஏனெனில் அந்த ஒளி உண்மையின் உறைவிடமாக விளங்கியது'' எனக் கூறினார்.

ஆம். இந்நாட்டில் ஒளி வீசிய விளக்கு, சாதாரண விளக்கு அன்று. அது உண்மையின் உருவம். உண்மை அழிவற்றது; அது காலத்தையும் இடத்தையும் கடந்தது. அந்த உண்மையே கடவுள்.



# ரோஜா உதிர்த்த இதழ்கள்

அரியலூர் சகோதரர்கள்

* உலகமும் இந்தியாவிலுள்ள நாமும் யுகசந்திப்பில் இருந்து வருகிறோம்; இது திண்ணைப் பேச்சாகத் தோன்றலாம். ஆயினும் உண்மையானதே. மாறுகின்ற காலத்துக்கு ஏற்ப நாமும் மாறிக் கொள்ள வேண்டும்.

* நம்மைச் சுற்றிலும், நாம் காணும் தீமைகளுக்கிடையே, அதன் சீரழிவுக்கிடையே, நாம் இவ்வுலகில் வாழவேண்டியுள்ளது. அத்துடன் உலகில் நல்ல விஷயங்களும் ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு தனி நபரிடமும் கூட்டத்தாரிடையேயும் 'தெய்விக அம்சம்' என்று சொல்லக் கூடிய பண்பு நிறைய நிலவுவதையும் காணலாம். நமது நாட்டுப் பண்பில் நிலைத்தவர்களாகவும் நாம் இருந்து நமக்குள்ள அந்தத் தெய்விகத் தீயும் ஓரளவு இருக்குமானால் ஒரு வேளை இணைந்த கண்ணோட்டம் நமக்கு ஏற்படக் கூடும்.

* நம்மை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகளை, நாம் ஆசியப் பிரச்னைகள் என்றோ, ஐரோப்பியப் பிரச்னைகள் என்றோ பிரிக்கக் கூடாது. அவை உலகப் பிரச்னைகள். மக்கள் சாதியின் பிரச்னைகள். உலகம் பூராவுக்குமாக நாம் அப்பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். அதாவது உலகத்திலுள்ள வறுமையையும், துன்பத்தையும் ஒழிப்பது என்பதுதான் இதன் பொருள். இதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம். ஆனால் நாம் இதையேகுறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

* இன்றைய உலகில் எங்கும் நிலவும் உணர்வு, பயம்தான் போலும். அநேகமாக எல்லோரும் ஏதாவது ஒன்றைப் பற்

றிப் பயப்படுகிருர்கள். ஒவ்வொரு நாடும் வேறு ஏதாவது ஒரு நாட்டைக் கண்டு பயப்படுகிறது. விரும்பத்தகாத எல்லாவிதமான விளைவுகளுக்கும் வழி வகுப்பது பயம் தானே? மனித உணர்வுகளிலேயே மிகவும் தீது அச்சம் தான். அதனுடைய ஆதிக்கத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிருேம். ஓரளவுக்காவது இந்த ஆதிக்கத்தின் பிடிப்பிலிருந்து நம்மால் விடுபட முடிந்தால், ஒருவேளை நமது பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வது மிகவும் எளிதாக இருக்கக்கூடும்.


* அரசியல் துறையில் மாத்திரமின்றி உணர்ச்சி பூர்வமாகவும் இந்தியா ஒன்றுபட வேண்டும். பல்வேறு வழிகளில் இத்தகைய இணைப்பை உருவாக்குவதே திட்டமிடுவதன் சாராம்சம். இணைப்பு என்ருல் ஒவ்வொரு கட்டத்திலும் ஒத்துழைப்பு வேண்டும். கூட்டு முயற்சியே முன்னேற்றத்துக்கு வழி என்பதை உணரவேண்டும்.

* மானிட ஜாதி முழுவதும் சுதந்திரம் பெறுவதே நமது **உள்ளத்து** இலட்சியம். அச்சுதந்திரத்தில் நமது உள்ளத்து லட்சியமும் அச்சுதந்திரத்தில் நமது மக்களின் தந்திரமும், பிற மக்களின் சுதந்திரமும் அடங்கி நிற்கின்றன.

நன்றி : குடியரசு



வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை. 4 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.



அருள்
15·2·69 கீலக-மாசி· விலை 30 காசு
ஆசிரியர்:
கலைச்செல்வி
மணிமேகலை

# இறைவனைப் பிரார்த்திப்பது எப்படி?



**ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்**

நீ எங்கிருந்து எச்செயலைச் செய்துகொண்டிருந்தாலும் மனத்தைமட்டும் சதா சர்வகாலமும் தெய்வத்தின் திருவடியில் வைத்திரு.

உன்னோடு தொடர்பு கொண்டிருப்பவர்களை உன்னுடைய உற்றார் உறவினர் என்று கருதாதே. பகவான் இந்த வடிவங்களில் வந்திருக்கிறார் என்று கருது. அவர்களை நீ பராமரிக்கின்றபொழுது பகவத் சேவை செய்வதாக எண்ணிக்கொள். இப்படிச் செய்து வந்தால் உனக்கு உலகப்பற்று குறையும்.

மனிதன் உலகுக்கு ஏதோ நன்மை செய்கிறான். அது பாராட்டத்தக்கது. ஆனால் ‘உலகுக்கு நான் நன்மைசெய்கிறேன்’ என்னும் செருக்கு அவனுக்கு வந்துவிடலாகாது. அத்தகைய செருக்கு உடையவனுக்கு சாதனத்தில் முன்னேற்றம் இல்லை. பற்றற்றுக் கர்மம் புரிவது மிகக் கடினம்.

யமுனை நதியைக் கடப்பதற்கு கரையோரம் வந்த கோபியர்கள் அங்கு வியாச பகவானைச் சந்தித்தார்கள்.

‘நாங்கள் நதியைக் கடப்பதற்கு இயலாதவர்களாயிருக்கிறோம். பகவானே, என்ன செய்வது?’ என்று வியாசரிடம் கேட்டார்கள்.

‘நானும் வருகிறேன். நாம் எல்லோரும் போவோம். அதைப் பற்றிய கவலைவேண்டாம். என் பசியாற்றுவதற்கு முதலில் ஏதாவது செய்யுங்கள்’ என்றார் வியாசர்.

---

## அட்டைப்பட விளக்கம்

ஆண்டவன்பால் தன் உள்ளத்தைப் பறி கொடுத்த பக்த சிரோமணிகளின் உன்னதமான பரம்பரையில் வந்தவர் இவ்விதழின் முகப்பு அட்டையை அலங்கரிக்கும் ஸ்ரீ ரமாதேவியார். இல்லறத்தில் இருந்துகொண்டே பக்திமார்க்கத்தைப் பரப்புவதில் இவர் நம் பாரதநாட்டு நாரீமணிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகிறார். இவரது சீரிய அருள் தொண்டு சிறந்தோங்கி விளங்குமாக!

—ஆசிரியர்.

தங்கள் வசமிருந்த வெண்ணெய், தயிர் முதலியவற்றை கோபிமார் வியாசருக்குப்படைத்தார்கள்.

அவரும் அதையெல்லாம் நன்கு புசித்தார்.

பிறகு யமுனைக் கரையோரம் நின்றுகொண்டு, 'ஓ யமுனாதேவி! இன்று நான் உபவாசம் இருந்தது உண்மையாகில் நாங்கள் அக்கரை போய்ச் சேருதற்கு வழி விடுவாயாக' என்றார்.

உடனே யமுனைநதி இரண்டாகப் பிரிந்து அவர்கள் நடந்து போவதற்கு வழிவிட்டது.

கோபியர்கள் திகைத்தார்கள்.

'இப்பொழுதுதான் நாம் படைத்ததை விலாப்புடைக்க இவர் அருந்தினார். உபவாசம் இருந்தது உண்மையாகில் என்று சொல்லுகிறாரே! இது எப்படிப் பொருந்தும்?' என்னும் ஐயம் அவர்களுக்கு வந்தது.

ஆனால் வியாச பகவான் தாம் அருந்தியதாகக் கருதவில்லை. அந்தராத்மாவாயிருக்கும் நாராயணனுக்குப் படைத்ததததாகவே அவர் எண்ணியிருந்தார்.

செயல் ஒன்றுக்குத் தன்னைக் கர்த்தாவாக எண்ணிக்கொள்ளாதவனைக் கர்மபலன் சார்வதில்லை.

பறவையும் துறவியும் நாளைக்கென்று எதையும் தேடிவைப்பதில்லை. ஆனால் குடும்பி ஒருவனுடைய வாழ்க்கைமுறை அத்தகையதன்று. அவன் தெய்வத்துக்குக் கடமைப்பட்டவன்; ரிஷிகளுக்குக் கடமைப்பட்டவன்; முன்னோர்களுக்குக் கடமைப்பட்டவன்; மனைவி மக்களுக்குக் கடமைப்பட்டவன்; மற்றவுயிர்களுக்கும் கடமைப்பட்டவன். ஆதலால் ஐம்பெரும் வேள்விகளை அவன் செய்தே ஆகவேண்டும்.

ஜனகர் ஓர் அலாதி புருஷர். ஞானவாள், கர்மவாள் ஆகிய இரண்டு வாள்களையும் அவர் ஏந்தியிருந்தார். பிரம்ம ஞானத்தில் அவர் பரிபூரணர். அத்துடன் உலகக் கடமைகளையும் முறையாக அவர் செய்து வந்தார்.

பணக்காரன் வீட்டிலிருக்கும் வேலைக்காரி போன்று நீங்கள் உலகில் வாழ்ந்திருங்கள். எஜமானனுடைய குழந்தைகளையும் வீடு வாசல்களையும் தன்னுடையவைகள் என வேலைக்காரி கருதுகிறாள். ஆனால் தன் சொந்த வீடு வேறு எங்கேயோ இருப்பதை அவள் மறந்துவிடுவதில்லை. உங்களுக்கு சொந்தவீடு தெய்வம் என்பதை நீங்கள் மறந்துவிடவேண்டாம்.

முதலில் கையில் எண்ணெயைப் பூசிக்கொள். பிறகு பலாப்பழத்தை அரிந்தெடு. இல்லையேல் அதன் பிசின் உன் கையில் ஒட்டிக்கொள்ளும். முதலில் ஈசுவர பக்தியை வளர். பின்பு உலகக் காரியங்களில் ஈடுபடு. இல்லையேல் உலகப்பற்று உன் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும்.

ஜனகர் போன்ற ராஜரிஷிகள் ஈசனை மனத்தில் சிந்தித்துக்கொண்டு உலகக் கிருத்தியங்களைச் செய்தார்கள். கரகம் எடுத்தாடுகிறவன் விதவிதமான ஆட்டங்களைக் காட்டுகிறான். ஆனால் அவன் கருத்தெல்லாம் தன் தலையின் மீதிருக்கும் கரகத்தைப் பற்றியதாம்.

நான் கர்த்தா என்னும் எண்ணத்தை அகற்றிவிட்டால் மனிதன் செய்கிற செயல்களெல்லாம் தேவாராதனையாக மாறி விடுகின்றன.

பக்தி ஓங்குமளவு கிரியைகள் ஓய்ந்து போகின்றன. புதிதாக மணந்துகொண்ட பெண் ஒருத்தி